The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சேராத வேறுகெளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே ஆட்டுக்கிடை உண்டாகும்." (அரு. 10: 11-16.)

புத்தகம் 18. | பெப்ரவரி 1920. | இலக்கம் ௨.

WHY DON'T CATHOLICS PROGRESS?

கத்தோலிக்கர் முன்னேறுததேன்?

கத்தோலிக்கரின் முன்னேற்றத்தைப்பற்றி சென்ற செப்டம்பர் மாதப் பத்திரிகையில் எழுதினோம். இம்மாதத்திலும் அவ்விஷயத்தைப்பற்றியே எழுத விரும்புகின்றோம். ஏனெனில், கத்தோலிக்கு ஜனசமூகம் லௌகிக விஷயத்தில் இதர வகுப்பினரை மேற்கொள்ளாமற் போனபோதிலும், அவர்களுக்குப் பின்னிடையாமல் சமமாகவாவது முன்னேறி, நலம்பெற்று உய்யவேண்டுமென்பது நமது அத்தியந்த ஆவல். பொதுப்படையாக கத்தோலிக்கு இந்தியர்களிடத்தில் லௌகிக முன்னேற்றத்தின்பேரில் அக்கரையிருப்பதாகத் தெரியவில்லை. பொதுநல வாஞ்சையுமில்லை. அவர்களில் யாதாமொருவர் இருவர் சமூக முன்னேற்றத்துக்கான முயற்சி செய்வார்களானால், அதை யாமோதித்து ஒத்துழைத்து வெற்றிபெற முடிப்பாரில்லை. நாமறிந்தமட்டும் கத்தோலிக்கருக்குள் எத்தனையோ பொதுநல ஸ்தாபனங்கள், முயற்சிகள், ஆரம்பிக்கப்பட்டு அவற்றையாதரிப்போரின்றி ஈடேறாமல் இடையறுந்து வீழ்ந்துவிட்டன. ஒரு பொதுநல ஸ்தாபனமாவது முளைத்து, வளர்ந்து, பூத்துக் காய்த்துப் பழுத்துப் பலன் கொடுத்ததாகச் சொல்வதற்கில்லை. உதாரணமாக, கத்தோலிக்கு இந்தியரின் லௌகிக பொது நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டு, சென்ற இருபது வருஷகாலமாக தள்ளாடித்தள்ளாடி நடந்து உயிர் போகாமல் வருஷத்துக்கொருமுறை கூச்சலிட்டுவரும் தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தின் நிலைமையைக் கவனித்தால், கத்தோலிக்கு இந்தியரின் பொதுநல ஊக்கம் இத்தன்மையதென்பது இனிது விளங்கும். தென்னிந்தியாவிலுள்ள கத்தோலிக்கு இந்தியர்கள் அனைவோருடையவும் இலௌகிகப் பொது நன்மையைப் பெருக்க, பரிபாலிக்க, பாதுகாக்க ஏற்பட்ட பொது ஸ்தாபனம் அது ஒன்றேயாகும். அது கத்தோலிக்கு இந்தியரால் தக்கபடி ஆதரிக்கப்படாததினால் பெரிதும் பலவீனமடைந்து, பரிசிக்கதக்க யாதொரு நன்மையையும் செய்ய இயலாமல், பேருக்குமாத்திரம் சங்கமெனக் காலங் கழித்துவருகிறது. அர்ச். பாப்பானவர், மேற்றிராணிமார், குருக்கள் முதலியோருடைய அங்கீகாரமும் ஆதரணையும்பெற்று,

கற்றோராகிய சில கனதனவான்களால் நடத்தப்பட்டுவந்தாலும், அந்தப் பிரயோஜனமான சங்கத்தைக் கத்தோலிக்கரில் பெரும்பாலோர் ஆதரிக்கவில்லை. ஆதலினால் அது உண்மையில் நடைப்பிணத்துக்கு ஒப்பாயிருக்கிறதென்றே சொல்லலாம். இவ்வாறு பொது ஸ்தாபனங்கள் ஈடேறாமற்போவதின் காரணமென்ன? ஜனங்களிடத்தில் முன்னேறுவதற்கான ஆசையும் ஆவலும், ஊக்கமுமில்லாதிருப்பதே காரணமாகும். அவரவர்களும் தங்கள் தங்கள் சுவல்ப முயற்சியாலோ, தெய்வாதீனமாய்க்கிடைத்த பிதிரார்ஜ்ஜிதத்தினாலோ வருகிற வரும்படியைக்கொண்டு தங்களுடையவும் தங்கள் பிள்ளைகுட்டிகளுடையவும் வயிற்றைநிரப்பிக்கொள்ளும்வரையில் மாத்திரம் கவலைகொள்ளுகிறார்களே தவிர இதர வகுப்பினர்களைப்போலப் பெருமுயற்சிசெய்து வர்த்தகத்திலோ, கைத்தொழிலிலோ கைப்பொருளைப்போட்டுப் பெரும் பொருளீட்டி, உலகசுகானுபவங்களைப்பெற ஆசைகொள்ளுகிறார்களில்லை. இந்த ஆசை யெங்கிருந்துவரும்? எப்படியுண்டாகும்? இச்சாமாத்திரத்தில் அல்லது ஒருநா ளிருநாளில் உண்டாகக்கூடியதா? இல்லையில்லை. நாளாவட்டத்தில் சிறுகச்சிறுக வுண்டாகி வலுத்துச் செய்கையாகவேண்டுவது. கல்வியாலும், கூட்டுறவாலும், புத்திக்கூர்மையாலும் பெறக்கூடியது. இவைகளில் அதிமுக்கியமானதாகிய கல்வியோ, கத்தோலிக்கு இந்தியர்களுக்குள் மிக்க குறைவாயிருக்கிறது. நமது சகோதரர்களாகிய புரொடஸ்டாண்டாரோடு நமது கத்தோலிக்கரை ஒத்திட்டுப்பார்க்குமளவில், அவர்கள் அடைந்திருக்குங் கல்வித்தேர்ச்சியில் அரைவாசிகூட இவர்கள் அடையவில்லை. இவர்களது ஆண் கல்வி இவ்வாறிருக்கப் பெண் கல்வியோ சுத்த மோசமாயிருக்கிறது. உயர்தரக் கல்வி புரொடஸ்டாண்டு பெண்பாலாருக்குள் அபாரமாய்ப்பெருகியிருக்கிறது. அவர்களுக்குள் பி. ஏ; எம். ஏ; டாக்டர், டீச்சர் பரிட்சைகொடுத்தவர்கள் அநேகருண்டு. அவர்களுடைய ஒழுக்கமும் குணமும் மெச்சத்தக்கனவாயிருக்கின்றன. கத்தோலிக்குப் பெண்களுக்கோ பெரும்பாலும் தமிழ் ஒருவாறு எழுதப் படிக்கத்தான் தெரியும். அதற்கு மேல் அவர்களைப் படிக்கவிடுவதில்லை. தற்கால நாகரிகத்திற்கு தமிழ்ப்படிப்புமாத்திரம் போதாது. மேல்நாட்டுக் கல்வி அத்தியாவசியமாகும். ஒரு நாட்டின் அல்லது குடும்பத்தின் ஸ்திரீகள் எவ்வளவு கல்வித்தேர்ச்சியடைந்திருக்கிறார்களோ அவ்வளவுக்கு அந்நாடு, அக்குடும்பம் நாகரிகமும், செல்வாக்கும், முற்போக்கும் அடைந்திருக்கும். நாகரிகமுற்ற நாடுகளிலெல்லாம் பெண் கல்வி பெருகியிருக்கும். பெண் கல்வி பெருகப்பெருக நாட்டின் நாகரிகமும் பெருகும். ஆகவே நம் கத்தோலிக்கு ஜனசமூகம் நாகரிகமுற்று முன்னேற வேண்டின், அவர்கள் பெண் கல்வியை அபிவிர்த்திபண்ணவேண்டும். இன்னுஞ் சொல்லவேண்டுமானால், ஆண் கல்வியை விடப் பெண் கல்வியையே அதிகமாய்க் கவனிக்கவேண்டும். ஏனெனில், பெண்களுக்கு நாம் போதிய அளவு கல்வி புகட்டிவிடுவோமானால் அப்பெண்கள் தங்கள் பிள்ளைகளினுடைய கல்வியைக் கவனித்துக்கொள்வார்கள். படித்த தாயானவள் தன் பிள்ளையாவது பெண்ணாவது படியாமல் மடையன் மடைச்சியாக விடமாட்டாள்; அவர்களுக்கு எப்பாடுபட்டாவது கல்வி கற்பிக்கப் பிரயாசைப்படுவாள். தாய்மாராகப்போகிற பெண்களுக்கு நாம் படிப்பூட்டிவிடுவோமானால், அவர்கள் தங்கள் மக்களுக்குப் படிப்பூட்டுவார்கள். இவ்வாறு படிப்பு வாழையடிவாழையாகப் பலுகிப் பெருக்கமடையும். ஆகவே, கத்தோலிக்கு ஜனசமூகம் முன்னேறவேண்டுமானால் முன்னேற்றத்துக்கு மூலாதாரமாகிய கல்வியை விருத்திசெய்தல்வேண்டும். எல்லாத்துக்கு முதல் பெண்களுக்குக் கல்வி புகட்டவேண்டும். பெண்கள் அதிக மதிகமாய்ப் படிக்கவேண்டும். பெண்கள் அதிகமாய்ப் படித்தாலன்றி முன்னேற்றத்துக்கு வழியில்லை. பெண் கல்வியே முன்னேற்றம். முன்னேற்றமே பெண் கல்வி.

முச்சுடரு மொன்று மும்மூர்த்தியல்ல
மூவருமே யாளுருவு மொன்றேயாகு
மச்சிதா மவர்களுமே யாண்பெண்ணல்ல
அானுமல்ல விலிங்கமல்ல வனுதியான
சச்சிதானந்தனையே வணக்கஞ்செய்து
சற்குருவைத் தரிசித்து சரணம்பண்ணி
எச்சரிக்கைகொண்டு நடவப்பாவப்பா
வெண்ணில்லா முத்திவழி யெய்துவாயே.

FIGURES OF OUR LADY.
மரியாயின் உவமான விளக்கம்.

(முன் தொடர்ச்சி.)

X

மோயீசனின் சகோதரி மரியாய்.

"கன்னிகையின் நாமதேயம் மரியாய்" (அர்ச். லூக்காஸ் 1, 27).

இஸ்ராயேலரை முறியடிக்கபாரோவாவின் சேனைகள் பின்துடர்ந்துவந்தன. எதிரே கடல். இஸ்ராயேலர் மலைத்து நின்றார்கள். மோயீசன் அப்போது கடலின்மீது கையை நீட்டினான். "நீட்டவே, கர்த்தர் இராமுழுதும் அதி யுக்கிரமான உஷ்ணமுள்ள காற்றை வீசுவித்துக் கடலை வாரிக் கட்டாந்தரையாக மாற்றினார். சலம் இரு பிரிவாகிவிட்டது. இஸ்ராயேலர் வரண்ட கடலினடுவே பிரவேசித்தனர். இதைக்கண்ட பாரோவாவின் சேனைகள் பின்பற்றின. அப்போது மோயீசன் கடலின்மீது கையை நீட்டினான். நீட்டவே விடியற்காலத்தில் கடல் வேகமாய்த் திரும்பி வந்தது. எஜிப்தியர் ஓடிப்போகையில் ஜலங்கள் அவர்களுக்கெதிராக வந்தமையால் கர்த்தர் அவர்களைக் கடலின் நடுவே கவிழ்த்துப்போட்டார். இவ்வாறு கர்த்தர் அந்நாளிலே இஸ்ராயேலரை எஜிப்தியருடைய கைகளினின்று இரக்ஷித்தருளினார்." இவ்வற்புத உபகாரத்தைப் பெற்ற மோயீசனும் அவரது பிரஜையுங் கடவுளுக்குத் துத்தியம் பாடினர். "கர்த்தருக்குப் பாட்டுப்பாடுவோம். ஏனெனில் அவர் பிரபலமாய் வெற்றி சிறந்தார். புரவியையும் அதன் மேலேறியிராநின்ற வீரனையுங் கடலிலே வீழ்த்தினார். கர்த்தர் என் பெலனும், என் ஸ்துதிகளுக்குப் பாத்திரவானுமாயிருக்கிறார். எனக்கவர் இரட்சணியந் தந்தவராயினர். அவர் என் தேவனானபடியால் அவரை நான் மேன்மைப்படுத்துவேன்" என்று ஆண்மக்கள் கர்த்தரை வாயாரப் போற்றியபின் பெண்மக்களும் அப்படியேசெய்ய ஆரம்பித்தனர். ஆரோன், மோயீசன் சகோதரியாகிய "மரியாய் என்னுந் தீர்க்கதரிசியானவள் தன் கையிலே மத்தளம் பிடித்துக்கொண்டாள். அதைக்கண்டு மற்றுமுள்ள ஸ்திரீகளெல்லாம் தங்கள் மத்தளங்களையுமெடுத்துப் பாடியும் ஆடியும் வெளியேபோனார்கள். மரியாய் இராகமெடுத்து: 'கர்த்தரைப் புகழ்ந்து சங்கீதம் பாடக்கடவோம்; ஏனெனில் அவர் பிரபலமாய் வெற்றி சிறந்தனர். புரவியையும் அதன்மேலேறியிராநின்ற வீரனையுங் கடலிலே வீழ்த்தினர்' என்று பாட்டுப்பாடினாள்."

1. மோயீசன், ஆரோனின் சகோதரி மரியாய், பலவகையிற் கன்னிமரியாய்க்கு உவமானம். "கர்த்தரைப் புகழ்ந்து சங்கீதம் பாடுவோம். ஏனெனில் அவர் பிரபலியமாய் வெற்றி சிறந்தனர்" எனப் போற்றினாள் மோயீசன் சகோதரி. "என் ஆத்துமமானது ஆண்டவரை வணங்கித் தோத்திரம்பண்ணுகின்றது" எனக் கன்னிமரி இஸ்பிரீத்துசாந்துவால் ஏவப்பட்டு மனமுவந்து பாடினாள். மோயீசன் சகோதரி பாடிய பாடலைவிட கன்னிமரியாயின் கீதம் பன்மடங்கு சிறந்தது. மேலான சந்தர்ப்பத்திற் பாடப்பட்டது. ஏனெனில் இஸ்ராயேலர் இரக்ஷிக்கப்பட்டவுடன் மோயீசன் சகோதரி பாடினாள். ஆனால் மரியாய் பாடியபொழுது சத்துருவின் கையினின்று காப்பாற்றப்பட்டவர்கள் ஒரு ஜாதிஜனத்தார்மட்டுமன்று. அச்சமயம் உலக இரட்சணிய அலுவல் ஆரம்பமாயிற்று; மனுக்குலத்தைப் பேயினடிமையினின்று மீட்கக் கடவுள் வந்திருந்தார். "பழய ஏற்பாட்டில் மோயீசனின் சகோதரி மரியாய் பாடியதே முதற் கீதம். அவ்வாறே புதிய ஏற்பாட்டில் கன்னிமரியாய் பாடியதே முதற் கீதமாம்" எனக் கனிசியஸ் குறிப்பிடுகிறார். இஸ்ராயேலின் ஸ்திரீகளெல்லாஞ் சர்வேஸ்வரனைத் துதிப்பதற்கு மோயீசன் சகோதரி வழிகாட்டியாயிருந்ததுபோல் கன்னிமரியாய் உலகத்திலுள்ள சகல ஸ்திரீகளுக்கும் முன்னோடியாயிருந்தனள். அது தாம் பாடிய கீதத்தால்மட்டுமன்று தமது சுத்தக்கருத்தாலும் மாசற்ற இருதயத்தின் குணத்தாலும் முன்மாதிரிகையாயிருந்ததினாலுமாம்.

2. "மோயீசன் சகோதரி ஓர் கன்னிகை என்பது வெளிப்படை. ஏனெனில் அவள் கலியாணஞ்செய்தவளாயிருப்பின் அவள் தனது புருஷன் பெயராலழைக்கப்பட்டிருப்பாள். ஆனால் ஆரோனின் சகோதரியென்றே யழைக்கப்பட்டிருக்கின்றனள். வேதாகமத்தின் எப்பக்கத்திலேனும் அவள் புருஷனைப்பற்றிப் பேசப்படவில்லை" என நிசினுஸ்கிரகோரியார் பகர்கின்றனர். இங்ஙனமே அபிப்பிராயங்கொண்டுள்ளார் அர்ச். அமிர்தநாதர். ஆகவே, மோயீசன்

சகோதரி ஓர் கன்னிகை. அர்ச். கன்னிமரியாய்க்கோர் உவமானமாம்.

3. மோயீசன் சகோதரியாகிய மரியாள் மற்ற ஸ்திரீகளுக்கு முன்சென்றாள். அப்படியே கன்னிமரியாயும் மற்றக் கன்னியர்களுக்கு முன்னோடியாகவும் முன்மாதிரிகையாகவும் நிற்கின்றாள். "அவளுக்குப்பின் கன்னிகைகள் இராசாவினிடங் கூட்டிவரப்படுவார்கள்; அவர்களுடைய தோழிகள் உமக் களிக்கப்படுவார்கள். சந்தோஷத்திலும் ஆனந்தத்திலும் உமக்கு ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்" எனச் சங்கீதாகமத்திற் சொல்லப்பட்டுள்ள இவ்வசனம் கன்னிமரியாய்க்கு நன்கு பொருந்துமென பெல்லார்மின் சாஸ்திரியார் செப்புகின்றார். மரியாய் சேசுவின் மாதாவும் கடவுளது பத்தினியுமாம். தமது கன்னிமையைக் கடவுளுக்குப் பரித்தியாகஞ்செய்தனள். அவளைப் பின்பற்றியே தற்போது எண்ணில்லாக் கன்னியர்கள் சேசுவின் நேசபத்தினிகளாகின்றனர். மரியாயின் முன்மாதிரிகையால் ஏவப்பட்டே உலக பத்தாவை விரும்பாது சேசுநாதரையே தஞ்சொந்த பத்தாவாகக்கொண்டுள்ளார் அநேகானேக கன்னியர்.

4. மோயீசன் சகோதரி தனது நாமத்தினிமித்தம் பரிசுத்த மரியாய்க்கு உவமானம். மோயீசன் சகோதரியின் பெயர் மரியாய். பரிசுத்தக் கன்னிகையின் பெயரும் மரியாயே. மரியாயெனும் பதத்திற்குப் பல பொருள் கண்டுபிடித்திருக்கின்றனர் அர்ச்சியசிஷ்டவர்களும் வேதபாரகர்களும்.

(a) 'மரியாய்' என்றால் எபிரேய பாஷையில் துன்பக்கடல். "சகல வரப்பிரசாதங்களும் நிறையப்பெற்றவளாதலால் அவள் மெய்யாகவே கடலுக்குச் சமானம்" என அர்ச். பொனவெந்தூரர் பகர்கின்றனர். நதிகள் கடலில்போய் வீழ்கிறதுபோல் வரப்பிரசாத வாய்க்கால்களெல்லாம் அவளது ஆத்மாவிற் பாய்ந்து அதை நிறப்பின. இஸ்பிரீத்துசாந்துவின் கொடைகளே அவ்வாய்க்கால்களாகும். எல்லா நதிகளுங் கடைசியில் சமுத்திரமேபோய்ப் பாய்கின்றன. இவ்வுலகின்கண்ணுள்ள சகல மனிதருக்குங் கிடைக்கிற அருள் முற்றும் இக்கன்னிகையிட மொருங்கேயிருந்தது. சம்மனசுக்கள், பிதாப்பிதாக்கள், தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள், வேதசாட்சிகள், வேதபாரகர்கள், கன்னியர்கள் யாவருக்கும்வந்த வரப்பிரசாதங்களெல்லாம் மரியாய்க்குக் கிடைத்திருந்தது. "வழியையும் உண்மையையுங் காட்டுஞ் சகல வரப்பிரசாதமும் என்னிடமிருக்கின்றது. சீவியத்திற்கும் புண்ணியத்திற்கும்வேண்டிய நம்பிக்கை என்னிடமுளது" எனுஞ் சர்வப்பிரசங்கியாரின் வார்த்தைகளை மரியாய் நன்கு உச்சரிக்கலாம். நமக்கே எண்ணிலா வரங்கள் சொல்லொண்ணுவண்ணம் வருகிறதானால் கன்னிமரியாய்க்குவந்த அருளை வரையறுப்பவர் எவர்? "மரியாயே! நீர் பிரியதத்தத்தினால் பூரணமானவள். கடவுளினிடத்திருந்து அருள் பெற்றவள். அவ்வருளை உலகத்திற்கு பொழிந்திருக்கின்றனை" என அர்ச். அகுஸ்தீன் வசனிக்கின்றார்.

(b) 'மரியாய்' அருட்கடலாயிருப்பதோடு துயரக்கடலாகவு மிருக்கின்றனள். ரூத் ஆகமத்திலுள்ள நோயிமியின் வார்த்தைகள் மரியாய் மட்டில் சரியாய்ப் பொருந்தும். "என்னை யலங்கிர்தமெனப் பெயர்கொள்ளும் நோயிமியென்று கூப்பிடாதே—துயரமெனப் பொருள்படும் 'மாரா'வென் றழைப்பாயாக. ஏனெனில் சர்வ வல்லமையுள்ளவர் என்னைத் துயரத்தினால் முற்றும் நிறப்பியுள்ளார்." சகலவித துக்கமும் வாதனையும் ஓடிச்செல்லும் நதிகள் விழுந் துயரக்கடல் மரியாய். அவளது இருதயத்தைத் வியாகுல வாட்கள் ஊடுருவின. அவளது இருதயத்தை ஓர் வாள் ஊடுருவும் என்று தீர்க்கதரிசனமாக சிமியோன் சொன்னபோதும்; திவ்ய குழந்தையை எரோது இராஜா கொல்ல எத்தனித்தபோதும், எஜிப்து நாட்டிற்குப்போகச் சம்பவித்தபோதும் மூன்று நாள் துயரத்தோடு காணாமற்போன குழந்தையைத் தேடி யலைந்தபோதும், தமது குமாரன் சிலுவையைச் சுமந்துகொண்டுபோகையில் அவரைச் சந்தித்தபோதும், சிலுவையில் அவர் உயிர்துறந்தபோதுங் கடைசியாக மரித்துப்போன சடலத்தைத் தமது மடியில் வளர்த்தியபோதும் ஏழு துயர வாய்க்கால்கள் அவள் இருதயத்திற் பாய்ந்து அதை ஓர் துயரக்கடலாக்கின.

தனது இரு குமாரர்களின் மரணத்தினிமித்தம் 'நோயிமி' துயரமுஞ் சஞ்சலமுமடைந்திருந்தாள். நோயிமி அழகுந் துயரமும் பொருந்தியவள். கன்னிமரியாயும் அழகுந் துயரமுங் கொண்டவள். இஸ்பிரீத்துசாந்துவி னற்புதச் செயலால் அழகும், தமது குமாரனின் பாடுகளால் துயரமும் பெற்றுள்ளாள் கன்னிமரியாய். "நோயிமியைப்போல் தமது இரு குமாரர்க

ளின் மரணத்தால் மரியாய் துயரக்கடலானாள். மரியாய் சேசுவுக்கும் நமக்குந் தாய். இருவரும் மரித்தனர். ஒருவர் சரீர உயிர்துறந்தனர். மற்றவர் பாவத்தால் ஆத்தும உயிர்துறந்தனர்" என அர்ச். அன்செல்ம் செப்புகின்றார். வேதசாக்ஷிகளின் இராக்கினியே! வியாகுலமாதாவே! நீர் ஒரு பக்கத்தில் துயரக்கடலாகவும் மறுபக்கத்தில் அருட்கடலாகவுமிருக்கின்றீர். உமது திருக் குமாரன் சேசுவின் துயரத்தில் நீர் பெரும் பங்கடைந்தீர். அதில் எனக்கும் ஓர் பங்கு கிடைக்கச்செய்தருளும். அவரது பாடுகளின் பாத்திரத்தினின்று நானும் பானம்பண்ணப் பாக்கியந் தந்தருளும். மேலுஞ் துயர சமுத்திரமாகிய இவ்வுலகில் எங்களுக்குத் துணையாயிருப்பீராக."

(*c*) 'மரியாய்' என்றால் சமுத்திரத்தின் நக்ஷத்திரம் என்று எரோனிமஸ், பெர்நார்து, பொனவெந்தூரா எனும் அர்ச்சியசிஷ்டவர்களும் வேறு பலரும் பகர்கின்றனர். "உலகமானது ஓர் சமுத்திரம். பரிசுத்த கன்னிகை ஓர் தாரகை. அதினின்று சேசுநாதர் உதயமாகி உலகத்திற்குப் பிரகாசம் அளிக்கின்றார்" என இல்தெபோன்ஸ் உரைக்கின்றார். "சமுத்திரத்தின் நக்ஷத்திரம் மரியாய். ஏனெனில் மாலுமி ஓர் தாரகையினுதவியால் கரைசேருவதுபோல், விசுவாசிகள் கன்னிமரியாயினுதவியால் பரகதியடைகின்றார்கள்" என அர்ச். தோமையார் வசனிக்கின்றார். சமுத்திரத்தின் நக்ஷத்திரம் மரியாயைச் சரியாய் உவமிக்கின்றதென்று அபிப்பிராயப்படுகின்றார் அர்ச். அமிர்தநாதர். கடலில் பிரயாணஞ்செய்வோர் நக்ஷத்திரத்தை மேனோக்கிச்செல்வதுபோல், இத்துக்கசாகரத்தில் நாம் பயமின்றி கரைசேர மரியாயை யேரெடுத்துப் பார்க்கவேண்டும். மரியாய் சமுத்திரத்தின் நக்ஷத்திரமென்பதற்குத் திருச்சபையே சான்று. ஏனெனில் மந்திரமாலையில் 'சமுத்திரத்தின் நக்ஷத்திரமே' எனப் புகழ்கின்றது.

(*d*) 'மரியாய்' என்றால் எஜமாட்டி அல்லது அரசி எனப் பொருள்படும். மரியாயி, சிருஷ்டிகரும் உலக இரட்சகருமாகிய சேசுவின் தாயாயிருப்பதால் அவருக்குப்பின் மகிமைக்குரியவள் அவளே. தான் சேசுவின் மாதாவானதால், அவரது இராச்சியத்தின்மீது ஓர்வித சுதந்தரம் பெற்றவளாயிருக்கின்றனள். "மரியாய் பரலோக பூலோக பாதாளலோகத்திலுள்ள சகல சிருஷ்டிகளின் அரசி" என அர்ச். பொனவெந்தூரா சொல்லுகிறார்: சம்மனசுக்களின் இராக்கினியும் அவளன்றோ? தேவதூதர் பணிபுரியும் பாக்கியம் அவளுக்கன்றோ கிடைத்தது? "வானசேனையின் அதிபதியாகிய மிக்கேலும், தேவதூதர்களும், கன்னிமரியாயே! உமது ஆக்ஞாபனையைச் சிரமேற்கொண்டு பணிபுரியப் பின்வாங்கார். உமதுபேரில் பத்தியுள்ள ஆத்துமாக்களுக்கு அவர்களது சீவியகாலத்திலும் விசேஷமாய் அவர்களது மரணத்தருவாயிலும் உதவி ஒத்தாசை புரிந்துவருகின்றனர்" என்று அர்ச். அகுஸ்தீன் உரைக்கின்றார்.

பூலோகவாசிகளுக்கும் அரசி கன்னிமரியாய். நாம் சேசுநாதரால் இரட்சிக்கப்பட்டோம். அதின் விலையாகத் தமது சரீரத்தையும் இரத்தத்தையு மீந்தார் தேவ சுதன். அச்சரீரத்தையும் இரத்தத்தையுங் கொடுத்தவர் கன்னிமரியன்றோ? ஆகையால் மெய்யாகவே மண்ணுலகோரினரசி மரியாய். அவ்வரசியினுண்மையூழியர்களாயிருப்பது நமது கடமையாம். அதனால் நமக்கே லாபம். ஏனெனில் மரியாயின்வழியாகவே சர்வேஸ்வரன் நமக்குச் சகல வரப்பிரசாதங்களுமளிக்கின்றார்" என அர்ச். பெர்நார்து கூறுகிறார். நாம் புரியும் நற்கிருத்தியங்கள்யாவற்றையும் அத்தாயின் மூலமாகவே அளிப்போமாக. "நமதுமட்டில் அனந்ததயாளமும், தமது திருக் குமாரனிடம் அதிக வல்லமையும் புனைந்துள்ளவள். மரியாய் ஆகிய அத்தாயினிடம் நாம் சரணமடையக் கிடைத்திருக்கும் பாக்கியமே பெரும் பாக்கியம்" என அர்ச். பொனவெந்தூரா வசனிக்கின்றார்.

நரகக்கூளிகளின் அரசியுமாயிருக்கின்றனள் மரியாய். பசாசுகளின்மீதும் அவளுக்கு அதிக அதிகாரமுண்டு. சிருஷ்டிக்கப்பட்ட சமஸ்தரும் பேய்க்கு அடிமையாயினர். ஆனால் கன்னிமரியாய் ஒருவளே பசாசிற்கடிமையாயிருந்ததில்லை. அத்தாயின் அமிர்த நாமத்தைக் கேட்க, பேய்கள் நடுநடுங்குகின்றன. அத்தாயைக்காணவும் பயமெடுத்தோடுகின்றன. பசாசின் வலையில் நாம் இனிமேலகப்படாதிருக்கும் வண்ணம் அத்தாயின் சலுகையையிரந்து மன்றாடுவோமாக.

(*e*) 'மரி' என்றால் சமஸ்கிருத பாஷையில் மகிமை, உன்னதம் என்றும், சிறப்புற்ற, சகலமும் நிறையப்பெற்றவென்றும் பொருள்படும். இது கன்னிமரியாய்க்கு ஒத்ததுவே. அத்தாய் உன்னதமகிமையுடைத்தானவள் என்பது நமக்கு

நன்கு விளங்கும். சமஸ்த காரியங்களுக்கும் ஊருணி கடவுள். அவரே அவளிடமிருந்தார். ஆகையால் சகலமும் நிறையப்பெற்றவள் அவள்.

(*f*) 'மரியாய்' என்றால் தமிழ்ப்பாஷையில் சாகமாட்டாய் என அர்த்தங்கொள்ளும். அவளது சீவியமே அதற்குச் சான்று. மனிதருக்கு இரு வகை மரணமுண்டு. அப்படியே அர்ச். அருளப்பர் காட்சியாகமத்தில் சொல்லுகிறார். ஒன்று உயிர் உடலைவிட்டுப் பிரிகிறது; மற்றொன்று பசாசிற்கடிமையாகி நரகிற்குப்போகிறது. பின்னையது மரியாயை யணுகவேயில்லை. மற்ற மனுமக்களிடம் பசாசினுளுகை சற்றாகிலுமிருந்தது. அவர்களது ஆத்துமம் சற்றென்கிலும் ஜென்மப்பாவத்தால் மரித்திருந்தது. ஆனால் கன்னிமரியாயினிடம் அப்பேர்க்கொத்த மரணஞ் சற்றுங் கிட்டவேயில்லை. உயிர் உடலை விட்டுப்போகிறதே சாதாரண மரணம். இது ஜென்மப்பாவத்தின் தோஷம். ஆகையால் அப்பாவத்தோடு ஜென்மித்துப் பிறப்பவர்கள் யாவரும் மரிப்பது சகஜம். ஆனால் கன்னிமரியாயிடம் அத்தோஷமிருந்ததில்லை. ஆயினும் மரித்தாள். ஏனெனில் தேவ சுதனைப் பின்பற்றுவதே பாக்கியமெனக்கொண்டாள். நாம் அத்தாயின் நாமத்தை யடிக்கடி விசேஷமாய் சோதனைகாலங்களில் விசுவாசத்தோடும் உருக்கத்தோடுந் தாழ்மையோடும் உச்சரிப்போமேயானால் ஆத்தும மரணத்திற்காளாகமாட்டோம்.

மரியாயின் நாமத்தின் மதுரகுணத்தைக் காட்ட 'சேசாரியஸ்' எனுஞ் சரித்திராசிரியர் பின்வரும் சம்பவத்தை விளம்பியுளர். கொலோன் பட்டணத்தின்கண்ணுள்ள அர்ச். செவரினூஸ் ஆலயத்தின் பக்கத்தில் ஓர் புண்ணிய துறவியார் வசித்துவந்தனர். அவர் பெயர் மாசிலியுஸ். முன் தஸ்கனிநாட்டிற்கு மேற்றிராணியாராயிருந்தவர். அவரை யநேக ஜனங்கள் தரிசிக்க வருவது வழக்கம். தமது ஆத்தும விஷயமாய் பல காரியங்களை யவரிடஞ்சொல்லி புத்திமதி தேடிப்போவார்கள். ஒரு நாள் ஓர் மாது அவரைத் தரிசித்தாள். தான் 'மரியாய்' என்று உச்சரிக்கும்போதெல்லாம் நாவில் மதுர சுவை யடைகிறதாகச் செப்பினாள். "இவ்வித அரிய சகாயத்திற்கு என்னகாரணம்" எனத் துறவியார் வினவ, "நான் நாள்தோறுந் தேவ தாயைக் குறித்து 50 தடவை பிரியதத்த மந்திரத்தை ஓதிவருகிறேன். அதைச் சொல்லும் போதெல்லாம் தேனினுமினிய சுவையையடைகின்றேன்" என்று விடைபகர்ந்தாள். அத்துறவியாரும் அப்படியே செய்யத் தலைப்பட்டார். ஆறு வாரங்களாயின. அதற்கப்பால் அவருந் தமது நாவில் மதுர சுவை யடையும் பாக்கியம்பெற்றார்.

இச்சிறு செபமானது மரியாய்க்கு எவ்வளவு உகந்ததாயிருக்கின்றதென்பது மேற்கூறியவற்றால் நன்கு புலப்படுகிறது. இதைச் செபிப்பதில் கஷ்டமில்லை. ஆகையால் நாமும் நாள் தவறாது இச்சிறு செபத்தால் அத்தாயைப் போற்றுவோமாக.

(தொடரும்.)

M. S. M.

EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

2-ம் அதிகாரம்; வசனம்—51–52.

(முன் தொடர்ச்சி.)

வசனம்.—51. "பின்பு அவர் அவர்களோடு கூடப் புறப்பட்டு, நசரேத்தூருக்குவந்து, அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார். அவருடைய தாயார் இந்த வாக்கியங்களையெல்லாம் தன்னிருதயத்தில் வைத்திருந்தாள்." சேசுநாதர் தேவாலயத்தில் தமது தெய்வீக மகிமையின் கதிரை வீசி தாமே மெஸ்ஸியாவென்று வேதசாஸ்திரிகள் ஒருவாறு கண்டு தெளியும்படியான சில அடையாளங்களைக் காட்டினபின், திரும்பவும் சாதாரணமும், மறைவானதுமான சீவியத்தைத் தழுவிக்கொள்ளுகிறார். அவர் தாழ்மையிலும், மறைவிலும் உலகத்தில் பிரவேசித்ததுபோல், தமது விலைமதிக்கப்படாத சீவியத்தின் பெரும் பங்கைத் தாழ்மையான கீழ்ப்படிதலிலும், கடினமான தாரித்திரத்திலும் செலவழிக்கிறார்.

கீழ்ப்படியாமையால் முதல் ஆதாம் பாவத்தைக் கட்டிக்கொண்டான். அவன் இழந்துபோன பாக்கியபதவியை திரும்பவும் நமக்குச் சம்பாதித்து கொடுக்கிறதற்

காகப் புது ஆதாம் கீழ்ப்படிதலைக் கற்றுக் கொடுக்கிறார். அகங்காரத்தால் மனிதன் சர்வேசுரனைவிட்டகன்றான். தாழ்ச்சியால் அந்த அகங்காரத்தை இரட்சகர் பரிகரித்து ஜெயிக்கிறார்.

மனுக்குலத்தின் பெரும் பங்கான பேர்கள் கஷ்டத்திலும் உழைப்பிலும் மிகவும் சாதாரண அந்தஸ்திலே சீவிக்கவேண்டியவர்களாயிருப்பதினால், அந்தச் சாதாரண நிலைமையை நமது திவ்ய இரட்சகர் தெரிந்துகொண்டு தமது உத்தமமாதிரிகையினால் அதை விசேஷவிதமாய் அர்ச்சித்து சிறப்பிக்கச் சித்தமானார்.

எந்தக் காரியங்களில் சேசுநாதர் கீழ்ப்படிந்தார் என்றால், ஓர் ஏழை குடும்பத்தில் பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு எவ்வித அற்ப விஷயங்களிலும் கீழ்ப்படிவதுபோல், நமதாண்டவரும் தேவமாதாவுக்கும், சூசைமுனிக்கும் கீழ்ப்படிந்தார் என்றும், அவரைத் தச்சன் என்றும், தச்சனுடைய குமாரன் என்றும் நசரேத்தார் அழைத்துவந்ததினால், அவர் சூசைமுனியின் தச்சு பட்டடையில் வேலை செய்து அத்தொழிலைச்சார்ந்த எல்லா தாழ்மையான காரியங்களிலும், கீழ்ப்படிந்தார் என்றும் சந்தேகமில்லாமல் சொல்லலாம்.

"அவர்.........அவர்களுக்குக் கீழ்ப்படிந்தார்"......இவ்வசனத்தை வியாக்கியானஞ்செய்து அர்ச். பெர்நார்து எழுதியிருக்கும் பின்வரும் வாக்கியங்களைக் கவனிப்போமாக :—"யார்? எவர்களுக்கு? தேவன்—மனிதர்களுக்கு; மரியாயிக்கும், சூசையப்பருக்கும் கீழ்ப்படிந்தார். ஓ! அதிசயமே! ஒப்பற்ற புதுமையே!! தேவன், ஒரு ஸ்திரீக்குப் பணிவது நிகரில்லா தாழ்ச்சியின் புதுமை! ஒரு ஸ்திரீ தேவனுக்குக் கட்டளையிடுவது இணையில்லா மாட்சிமையின் புதுமை! கர்வங்கொள்கிற தூசியும் தூளியுமான அற்ப மனிதா, வெட்கினாலும், தேவன் தம்மைத் தாழ்த்திக்கொள்ள நீ உன்னை உயர்த்துவது சரியா!"

"அவருடைய தாயார் இந்த வாக்கியங்களையெல்லாம் தன் இருதயத்தில் வைத்திருந்தாள்." தேவமாதா சேசுவின் பாலியப்பருவத்தின் வர்த்தமானங்களையெல்லாம் கண்ணாரக்கண்டு மகிழ்ந்துவந்தாள். அவர் பேசின வார்த்தைகளையும், செய்த காரியங்களையும், அவரைப்பற்றி மற்றவர்கள் சொன்ன வார்த்தைகளையும், செய்த காரியங்களையும் ஆய்ந்தாராய்ந்து ஒன்றோடொன்றை ஒப்பிட்டுப்பார்த்து, தேவ திருவுளத்தை வியந்து வாழ்த்தினாள். சம்மனசானவர் மெஸ்ஸியாவைப் பற்றி கூறியுள்ள மகத்தான ஸ்துதிகளும் அவருடைய அரசாட்சியின் பெருமைகளும், மனுக்குலத்தின் இரட்சண்யத்தின் பரம இரகசியமும், இவையெல்லாம் அவருடைய தாழ்மையான மறைவுள்ள சீவியத்தோடு எப்படிப் பொருந்துமென்று விசாரித்து தியானித்துவந்தாள். நாம் இனிமையான ஒரு சங்கீதத்தை, அல்லது வீணையின் மதுரமான ஓசையை ஒரு தடவை கேட்டால், அதனுடைய இன்னிசையை பூரணமாய்ச் சுகித்தனுபவிக்க, பல முறை அதைக்கேட்க விரும்புகிறோம். அதை மனப்பாடமாய்க் கற்றுக்கொண்டு அதின் இராகத்தை அடிக்கடி பாடி களிப்புறுகிறோம். அப்படியே கன்னிமாதாவும் தம்முடைய அன்புள்ள திவ்ய குமாரனையும், அவர் செய்துவந்த ஒவ்வொரு கிருத்தியத்தையும் ஓயாமல் தன் கண்முன் வைத்து தியானித்து இன்புற்றாள். ஓர் தாய்க்கு தான் பெற்றெடுத்த அன்பான பாலனுடைய முகத்தின் வடிவும், நேத்திரங்களின் ஒளியும், அவன் பேசும் மழலைச் சொல்லும், அவனுடைய ஆட்டமும் நடையும் பாவனையும் எல்லாம் இரமணீயமாயிருப்பதினால், அவைகளை அவள் தன்னுள்ளத்தில்வைத்து சிந்திப்பதில் பிரியப்படுவதுபோல், கன்னிமாதாவும் தம்முடைய திவ்ய குமாரனுடைய ஒப்பற்ற இலட்சணங்களைச் சதா சிந்தித்து அவைகளின் அமிர்தத்தைச் சுகித்து, ஆனந்தமடைந்தாள்.

அவளுடைய பாலன் தேவனாயிருந்ததினால், தேவ மகத்துவமும், தேவ ஞானமும், தெய்வீக அழகும் அருளும், இரட்சகருக்குரிய அன்பும் தயாளமும், பாவங்களின் நிமித்தம் உண்டான துக்கமும், துயரமும் அவருடைய முகத்தில் சதா மாறிமாறி துலங்கினதை அவள் கூர்ந்து நோக்கித் தரிசித்தாள். இத்தியானத்தில் அவள் நிமிஷங்களையும், நாட்களையும் மாதங்களையும், வருஷங்களையும் ஓயாமல் செலவழித்து வந்ததால், அவளடைந்த

கோடிக்கணக்கான புண்ணிய பேறுகளை யும், அவைகளின் உன்னத மகிமையையும் நாவால் எடுத்துரைக்க யார் தரம்.

சேசுநாதர் தமது முப்பதாம் பிரா யம் வரையில் நசரேத்தூரில் என்ன செய் துவந்தார் என்றால், தம்முடைய பெற்றோ ரைச் சார்ந்தமட்டும் அவர்களுக்கு சகலத் திலும் கீழ்ப்படிந்து, ஓர் அன்பான குமா ரன் தன் பிதா மாதாவுக்குச் செய்யும் சகலமான ஊழியத்தையும் அவர்களுக்குச் செய்தார் என்றும், தம்மைச் சார்ந்தமட் டில் மூன்றுவித விர்த்தியைக் காண்பித் தார் என்றும் சுவிசேஷ வாக்கியம் கூறு கிறது.

52-ம் வசனம்.—"சேசுநாதரோ வென்றால், சர்வேசுரனுக்கும், மனிதருக் குமுன்பாக ஞானத்திலும், பிராயத்திலும், வரப்பிரசாதத்திலும் வளர்ந்துகொண்டு வந்தார்."

வேதசாஸ்திரிகள், சேசுவின் ஆத்து மத்தில் மூவித ஞானம் விளங்கினதென்று கூறுகிறார்கள். அவை எவையெனில், 1. பிரத்தியக்ஷ தரிசனம், 2. சுய ஆராய்ச்சி யின்றி தேவ செயலால் பொழியப்பட்ட ஞானம், 3. சுய ஆராய்ச்சியால்வந்த அநு பவ ஞானம், அவையாவன :—

முதலாவது. —மோட்சவாசிகளுக்கு ரிய தேவ தரிசனம்.

இரண்டாவது.—சர்வேசுரன் ஆத்து மத்தில் பல வேறு காரியங்களின் அறிவை பொழிவதினால் ஏற்படுகிற ஞானம்.

மூன்றாவது.—மனிதன் தன் புலன்க ளின் உதவியால் கற்றறியும் அநுபவ ஞானம் என்பனவாம்.

முதலாவது ஞானமும் இரண்டாவது ஞானமும் சேசுநாதருடைய ஆத்துமத்தில் அவர் உற்பவமான முதல் க்ஷணத்தி லேயே சம்பூரணமாயிருந்தன. இவைக ளில் அவர் விர்த்தியடையவில்லை. ஆனால் புதிய விஷயங்களை நாளுக்குநாள் அவர் அநுபவத்தால் அறிந்துகொண்டதினால், அநுபவ ஞானத்தில்மாத்திரம் அவர் விர்த்தியடைந்தார் என்று சொல்லவேண் டும். அவருடைய சரீரரூப இலட்சண சாயல் எத்தன்மையோவென்று கேட்கில், திரு முகமண்டலம் தமது திவ்ய மாதா வின் முகச்சாயலாகக் காணப்பட்டு, சூரிய காந்தி பிரவேசித்த தர்ப்பணம் எப்படி பிரகாசிக்குமோ, அப்படியே தெய்வீகம் கொண்டிருந்த அவருடைய தேகம் திவ்ய காந்தி இலட்சணம் பொருந்தியதாய் விளங்கி நாளுக்கு நாள் வளர்ந்து பெருகி னது என்பதாம்.

அவர் வரப்பிரசாதத்தில் எப்படி வளர்ந்தார் என்று கேட்கில், அவருடைய ஆத்துமம் எப்போதும் இஷ்டப்பிரசாத வரங்களில் சம்பூரணம்பெற்று துலங்கின போதிலும், அவர் தம்முடைய சரீர வளர்த்தியினளவுக்கு ஏற்றதாய் நாளா வட்டம் பாலப்பருவத்தில் பாலனைப்போல வும் இளம்பிராயத்தில் வாலிபனைப்போல வும் நடுப்பருவத்தில் புருஷோத்தமனைப் போலவும் அந்தந்தப் பருவத்துக்குத்தக் காப்போல் சகல புண்ணிய கிருத்தியங்களை யும் அதிகமதிகமாய், உத்தமமாய், வெளிய ரங்கமாய்க் காண்பித்துவந்தார் என்பதாம்.

சர்வேசுரனுக்கும் மனிதருக்கும் முன் பாக ஞானத்திலும்......வரப்பிரசாதத்தி லும் வளர்ந்துகொண்டுவந்தார்......அவர் தமது வயதுக்குத் தக்காப்போல் காண் பித்துவந்த எண்ணிக்கைக்குள்ளடங்காத உன்னத புண்ணியங்களினால் சர்வேசுரன் அவர்பேரில் அளவற்ற பிரீதிகொண்டார்.

அவருடைய அருளும் ஞானமும் உதித்த சூரியன் கடிகைக்குக் கடிகை உச் சிக்கேறுவதுபோல், நாளுக்குநாள், மேலும் மேலும் வெளிப்பட்டு ஓங்கிவளர, மனித ரும் அவர்பேரில் அத்தியந்த பிரியம் கொண்டு அவரை நேசிக்கவும், பூசிக்கவும், போற்றவும், புகழவும், தங்கள் துக்கங்க ளுக்கு ஆறுதல் பெறவும், அவருடைய அழகிய இனிய முகதரிசனையைத் தேடி ஆவலாய்ப் போவார்கள்.

இவ்விதமாய் அவர் நசரேத்தூரில் வசித்த காலமெல்லாம் சுகந்தப் பொடி யடைத்த செப்பில், நறுமணம் பரிமளிக் குமாப்போல், திவ்ய ஆத்துமாக்களாகிய தேவமாதாவும் தேவ குமாரனும் சூசை முனியும் சகல சுகிர்தங்களைச் செய்து தாங்களிருந்த வீட்டைப் பூலோகமோட் சம்போலாக்கி, அத்தியந்த தேவ கரு ணைக்கு உகந்தவர்களானார்கள்.

2-ம் அதிகாரம்—முற்றிற்று.

S. M.

XXII GENERAL MEETING OF THE C. I. A.

தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கம்.

22-வது வருஷாந்தப் பொதுக்கூட்டம்.

சென்ற டிசம்பர்மீ 28-ம், 29-ம் தேதிகளில் தூத்துக்குடி அர்ச். சவேரியார் பாடசாலையில் மேற்படி பொதுக்கூட்டம் வெகு விமரிசையாய் நடைபெற்றது. சென்னை அதிமேற்றிராணியாராகிய மிகவும் வந். அருளப்ப ஆலன் ஆண்டவரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். சங். மாஹி சுவாமிகள் (சிரேஷ்டர்), பெர்ட்டிராம் சுவாமிகள், மார்ட்டின் சுவாமீகள், முனிஸ் சுவாமிகள், பிரடரிக் சுவாமிகள், லெபோ சுவாமிகள், ஏ. வி. ஞானப்பிரகாசம் சுவாமிகள், டி. ரோச்சு சுவாமிகள், கோமஸ் சுவாமிகள், அமலோற்பவநாத சுவாமிகள் முதலாயினோர்களும், சென்னை, திருச்சி, நாகப்பட்டணம், தென்காசி, சேர்ந்தமரம், பழயகாயல், பாளையங்கோட்டை முதலிய விடங்களிலுள்ள கிளைச் சங்கங்களின் பிரதிநிதிகளும், மற்ற அங்கத்தினர்களுமன்றி உள்ளூர் கிளைச் சங்கத்து அங்கத்தினர்களும் மற்றவர்களுமாக சுமார் ஐந்நூறுக்கதிகமான பேர்கள் விஜயஞ்செய்தனர்.

27-ம் தேதியாகிய சனிக்கிழமை மாலை 6 மணிக்கு, சென்னை, திருச்சி முதலிய விடங்களிலிருந்துவந்த அக்கிராசனாதிபதியவர்களையும், மற்ற வெளியூர் பிரதிநிதிகளையும் தூத்துக்குடி கிளைச் சங்கத்து உபசரணைக் கமிட்டியின் அக்கிராசனாதிபதியாக ம-ா-ா-ஸ்ரீ குரூஸ் பெர்னான்டஸ் அவர்களும், மற்ற மெம்பர்களும் ரெயில்வே ஸ்டேஷனில் பாண்டுவாத்தியத்துடன் எதிர்கொண்டு அன்பாய் வரவேற்று, புஷ்பாரங்கள் போட்டு உபசரித்தபின், அன்னோர் அனைவரையும் மோட்டார் ரதம், கோச்சுவண்டி முதலிய வாகனங்கள்மீதேற்றி, துவஜங்கள், தோரணங்கள், தீபங்கள், தழைகள், புஷ்பங்கள், பசுங்கோரைகள் முதலியவைகளால் மனோகரமாய் அலங்கரிக்கப்பட்டிருந்த வீதிகளினூடே பாண்டுவாத்தியம் பாணவேடிக்கைகளுடன் ஊர்வலஞ் செய்வித்து; அழைத்துக்கொண்டு கோவில் வாசற்படியண்டை போனவுடன் அதிமேற்றிராணியாண்டவரவர்களுக்கு ஒரு வந்தனோபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டபின், கோவிலுக்குள் எல்லோரும்போக தேவநற்கருணை ஆசீர்வாதங் கொடுக்கப்பட்டது. அதன்பின் அதிமேற்றிராணியாரவர்களும் மற்றும் பிரதிநிதிகளும் அவரவர்களுக்கு நியமிக்கப்பட்டிருந்த விடுதிகளிற்கொண்டுபோய் அமர்த்தப்பட்டார்கள். அங்கே உபசரணைக் கமிட்டி மெம்பர்களால் விருந்தினர்களுக்கு உண்டி, இருக்கை, படுக்கை முதலிய சௌகரியங்கள் மிக்க கனிகரமாய் விசாரிக்கப்பட்டு உதவப்பட்டன. இவ்விஷயமாய் உபசரணைக் கமிட்டியார்கள் செய்த உபசாரங்கள் பெரிதும் பாராட்டப்படத்தக்கன.

28-ம் தேதி காலை 10 மணிக்கு மிக. வந்திக்கத்தக்க அக்கிராசனாதிபதியவர்கள் கரகோஷத்தினிடையே ஆசனத்திலமரக் கூட்டம் ஆரம்பமாயிற்று. அக்கிராசனாதிபதியவர்கள் எழுந்திருந்து, அப்பெருங் கூட்டத்தில் அக்கிராசனம் வகிப்பதில் தமக்குண்டாகிய சந்தோஷத்தைப் பற்றியும், தெ. இ. க. சங்கம் இன்னும் அதிகமதிகமாய் வலிமைபெற்று, தென்னிந்தியாவிலுள்ள கத்தோலிக்கர்களுக்குத் தாரகமாயிருக்க வேண்டுமென்று தமக்குள்ள ஆவலைப்பற்றியும் பேசி யுட்கார்ந்தபின்னர், தூத்துக்குடி மியூனிசிபல் சேர்மனும், ராலி பிரதர்ஸ் புரோக்கருமாகிய ம-ா-ா-ஸ்ரீ குரூஸ் பெர்னான்டஸ் அவர்கள் உபசரணைக் கமிட்டியின் அக்கிராசனாதிபதியென்கிற தரப்பில், வெகு உற்சாகமாகப்பேசி சங்கத்து அக்கிராசனாதிபதியவர்களுக்கும். வெளியூரிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகளுக்கும் நல்வரவுகூறி யுபசரித்தார்கள். பிறகு சங்கத்து கௌரவகாரியதரிசியவர்கள், 1919ஆம் ஜூன்மீ 30-ம் தேதியோடு முடிவாகிய ஒரு வருஷத்திய வரவு செலவு கணக்குகளையும், அறிக்கையையும் கூட்டத்தினருக்கு வாசித்துக்காட்டினார்கள். அதன்பிரகாரம், அவ்வருஷத்தில் தாக்கலாயுள்ள அங்கத்தினரின் தொகை 415. இதில் விசேஷ அங்கத்தினர் 4; ஆதரணைக் கர்த்தர்கள் 2; பழய ஆயுள் அங்கத்தினர் 60; புது ஆயுள் அங்கத்தினர் 16; ஸ்திரி அங்கத்தினர் 1; சாதாரண அங்கத்தினர் 332. பிரஸ்தாப வருஷத்தில் சங்கத்து வரவு ரூ. 781—8—0. செலவு ரூ. 387—13—0. வருஷக் கடைசியில் கையிருப்பு

ரூ. 7,437—0—7. சங்கம் பதிவு செய்யப்பட்ட பின் சங்கத்தில் சேர்ந்து வேலைசெய்யும் கிளைச் சங்கங்கள் வெகு சிலவே. அவையாவன :— சென்னைநகர், திருச்சினாப்பள்ளி, திண்டுக்கல், தூத்துக்குடி, புரத்தாக்குடி, தென்காசி, வீரவநல்லூர், கீழ்ச்சேரி, பண்ணூர், பழயகாயல், மௌகுர் ஆகிய இடங்களிலுள்ள கிளைச் சங்கங்களேயாகும். இச்சங்கம் தென்னிந்தியாவிலுள்ள கத்தோலிக்குக் கிறீஸ்துவ ஜனசமூகத்துக்குப் பிரயோஜனப்படவேண்டுமானால், எல்லா மேற்றிராசனங்களிலுமுள்ள ஒவ்வொரு பங்கு விசாரணையிலும் ஒவ்வொரு கிளைச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு, பெருந்தொகையினராய் அதில் சேர்ந்து அதை யாதரிக்கவேண்டுமென்றும், அப்படிச் செய்வதினால் சங்கத்தின் நிதி பெருக்கமடைய கிறீஸ்துவர்களுக்குப் பல நன்மைகள் செய்யக்கூடுமென்றும், இவ்வாறு சங்கத்தை விருத்திசெய்ய கத்தோலிக்கர் முன் வந்து வேலை செய்யவேணுமென்றும் வற்புறுத்திச்சொல்லித் தமது அறிக்கையை, கௌரவ காரியதரிசியவர்கள் முடித்தார்கள். இந்த அறிக்கையும், கணக்குகளும் சபையோரால் அங்கீகரிக்கப்பட்டன.

அதன்பின் அக்கிராசனாதிபதியவர்கள் சீர்திருத்தச் சட்ட சம்பந்தமாய் நமது மேன்மைதங்கிய சக்கரவர்த்தியவர்கள் இந்திய மன்னர்களுக்கும் பிரஜைகளுக்கும் அனுப்பிய அருமைத் திருமுகத்தைப்பற்றி அவர்களுக்கு வந்தனம் அளிக்குமாறு பின்வரும் தீர்மானத்தைப் பிரேரிக்க, அதனைச் சபையோரெல்லாரும் ஏகமனதாய் கரகோஷத்துடன் அங்கீகரித்தார்கள் :—

"இந்திய ஜனங்களின் சுய பரிபாலனத்துக்கு முதற்படியாக அவர்களுக்குக் கொடுக்க இசைந்திருக்கிற இந்திய அரசியல் சீர்திருத்தச் சட்டத்திற்காக, மிகவும் மகத்துவம்பொருந்திய சக்கரவர்த்தியவர்களுக்கு தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தார், ராஜ விசுவாசமும் நன்றியறிதலுமுள்ள வந்தனம் அளிப்பதுடன், மிக மேன்மைதங்கிய வேல்ஸ் அரசிளங்குமாரர் இந்தியாவுக்கு விஜயஞ்செய்யவிருக்கிற சுப செய்தியைக் கேட்டுப் பெரு மகிழ்ச்சிகொள்ளுகிறார்கள்."

மறுபடியும் அக்கிராசனாதிபதியவர்கள், சங்கத்தில் அங்கத்தினர்களைச் சேர்த்துக்கொள்வதைப்பற்றிய 3-வது ஒழுங்குக்கு "யாதொரு ஜாதி வித்தியாசமில்லாமல்" கத்தோலிக்கு இந்தியர் எல்லோரும் சங்கத்தில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டுமென்று ஒரு திருத்தப் பிரேரணை கொண்டுவந்தார்கள். தற்கால ஒழுங்குகள் இருக்கிற வகையில் கத்தோலிக்கு இந்தியரெனப்படுவோரில் எவரும் நீக்கப்படவில்லையென்றும், ஆதலினால் அப்படிப்பட்ட திருத்தம் அனாவசியமென்றும் ஒருவர் சொல்ல, இன்னொருவர், என்றாலும் அக்கிராசனாதிபதியவர்கள் விருப்பப்படி அவ்வொழுங்கு வெளிப்படையாய் விளக்கப்படவேண்டுமென்று சொல்லி, அவரது திருத்தப் பிரேரணையை ஆமோதிக்க, அது அனைவோராலும் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டது. அதன்பிறகு பின்வருந் தீர்மானங்கள் ஒவ்வொன்றும், அதன்முன் குறிக்கப்பட்ட ஸ்ரீமானால் முறையே பிரேரிக்கப்பட்டு, மற்றொருவரால் ஆமோதிக்கப்பட்டு சபையோரால் அங்கீகரிக்கப்பட்டன :—

(1) கௌரவ காரியதரிசியவர்களால் :—

"இப்போது இருக்கிற நிருவாக சபையங்கத்தினரின் அலுவல் காலம் இன்னொரு வருஷமட்டும் நீளிக்கப்படவேண்டும்."

(2) ஸ்ரீமான் குரூஸ் பெர்நான்டஸ் அவர்களால் :—

"லோக்கல் போர்டு, மியூனிசிபல் கவுன்சில் முதலிய ஜனநாயக ஸ்தாபனங்களில் கத்தோலிக்கு இந்தியர்களுக்கு போதுமான ஸ்தாபனங்கள் கிடைக்கப்பெறாததால், அவர்கள் ஜனத்தொகைக்குத்தக்கபடி, அந்த ஸ்தாபனங்களில், கத்தோலிக்கு இந்தியர்கள் நியமிக்கப்படவேண்டிய அவசியத்தை கவர்ன்மென்டாருக்கு பலமாய் வற்புறுத்தவேண்டுமென்று, இக்கூட்டத்தார் அபிப்பிராயப்படுகிறார்கள்."

(3) ஸ்ரீமான் குரூஸ் பெர்நான்டஸ் அவர்களால் :—

"பெருந் தொகையினராயிருக்கும் மற்ற வகுப்பினர்களின் மத்தியில் கத்தோலிக்கு இந்தியர்களுக்கு கவர்ன்மென்டு உயர்தர உத்தியோகங்கள் கிட்டுவது அருமையாயிருப்பதால், உயர்தர பதவிகளுக்கு சிப்பந்திகளை உயர்த்தும் விஷயத்தில் கத்தோலிக்கு இந்தியர்களுக்கு முந்தின உரிமைகொடுக்கும்படி, கவர்ன்மென்ட் உத்தியோகசாலை அதிகாரிகள் அனைவருக்கும் உத்தரவு பிறப்பிக்கும்

படி கவர்ண்மெண்டாரை இக்கூட்டம் வேண்டிக்கொள்ளுகிறது."

(4) ஸ்ரீமான் ஏ. மாசிலாமணிப் பிள்ளையவர்களால் :—

"கனிஷ்மாரியென்னும் ஜனசங்கியைக் கணக்கெடுக்குங்காலத்தில் கத்தோலிக்கு இந்தியர்களை இந்தியக் கிறீஸ்துவர்கள் என்று எடுக்காமல், "கத்தோலிக்கு இந்தியர்கள்" என்று பிரத்தியேகமாய் கணக்கெடுக்கும்படி இக்கூட்டம் கவர்ண்மெண்டாரை வெகு மரியாதையுடன் விண்ணப்பஞ்செய்து கேட்டுக்கொள்ளுகிறது."

(5) ஸ்ரீமான் இ. ஏ. ரூபின் அவர்களால் :—

"கத்தோலிக்கு ஸ்திரிகளுக்குக் கைத்தொழிற்பயிற்சி அத்தியாவசியமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறதன்றி, அவர்களுக்குப் பிரயோஜனமான கைத்தொழிற் கல்வி பயிற்றுவிக்கும் விஷயமாய்க் கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் தங்களாலான உதவி செய்து அதை ஆதரிக்கும்படி மிக விநயமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்."

(6) ஸ்ரீமான் எம். பி. குழந்தைசாமிப் பிள்ளையவர்களால் :—

"இந்த ராஜதானியிலுள்ள அந்தந்த அதிமேற்றிராணிமார்களும், மேற்றிராணிமார்களும் தங்கள் தங்கள் மேற்றிராசனங்களுக்கு பிரதிநிதிகளாயிருக்க முறையே ஒரு குருவானவரையும், (குருவானவர் அல்லாத அதீட்சகரான) ஒரு கிறீஸ்துவரையும், நிருவாக சபைக்கு அனுப்பும் சுதந்தரமுடையவர்களாவார்கள்."

(7) ஸ்ரீமான் எம். இரத்தினசாமி முதலியார் (எம். ஏ; பாரிஷ்டர்) அவர்களால் :—

"கத்தோலிக்கு இந்தியர்களுக்குள்ளிருக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நிலைமையை உயர்த்தி, அவர்களது கஷ்டங்களை நிவர்த்திக்கவேண்டிய தீவிர முயற்சிசெய்யவேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது."

(8) ஸ்ரீமான் குருஸ் பெர்நான்டஸ் அவர்களால் :—

"இதர வகுப்பினர்கள் அடைந்திருக்கும் அபார செல்வாக்கையும், முன்னேற்றத்தையும் உத்தேசித்து, டிப்டி கலெக்டர், டிப்டி தாசில்தார், போலீசு டிப்டி சூப்பரின்டெண்டெண்ட்டு முதலிய உத்தியோகங்களுக்கு நியமனஞ் செய்கையில், கத்தோலிக்கு இந்தியர்கள் விஷயமாய் விசேஷ கவனஞ்செலுத்தப்படுவது அவசியமென்று இக்கூட்டத்தார் அபிப்பிராயப்பட்டு, அத்தகைய உத்தியோகங்களை கத்தோலிக்கு இந்தியர்களுக்கு இனிமேல் அதிகமாய்க் கொடுக்கும்படி அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கவேணுமாய் கவர்ண்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறார்கள்."

(9) ஆனரபில் மிஸ்டர் டி. அருமைநாதப் பிள்ளையவர்களால் :—

"இனி வரவிருக்கிற அரசியல் சீர்திருத்தத்தின்படி சென்னை சட்ட நிரூபண சபையில் இந்தியக் கிறீஸ்துவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்ப ஸ்தானங்கள் அவர்கள் முக்கியத்துக்கும், கல்விக்கும் போதுமானவையாயிராததால், குறைந்தபட்சம் 12 ஸ்தானங்கள் கொடுக்கப்படவேண்டுமென்றும், இந்தியா கவர்ண்மெண்ட் சட்ட நிரூபண சபையில் இந்தியக் கிறீஸ்துவர்களுக்கென்று குறைந்தது ஒரு ஸ்தானமாவது குறிப்பிட்டுத் தரவேண்டுமென்றும், இச்சங்கம் கவர்ண்மெண்டாரை பலமாய் வற்புறுத்திக் கேட்கிறது. மேலும், பிராமணரல்லாதாருக்குத் தக்கபடி ஸ்தானங்கள் விநியோகஞ்செய்தபின் பொது ஸ்தானங்களை இந்தியக் கிறீஸ்துவர்கள் மற்றவர்களுடன் போட்டிகொண்டு பெறுவதற்குத் தடைசெய்யாதிருக்கவுங் கேட்கிறது."

(10) ஸ்ரீமான் குருஸ் பெர்நான்டஸ் அவர்களால் :—

"மகம்மதியர்களுடைய திருநாட்களாகிய, பக்ரீத், பாரவபாத், ரம்சான் என்னும் நாட்கள் முன்னொரு காலத்தில் அவர்களுக்குமாத்திரம் விசேஷ விடுமுறை நாளாக இருந்தவைகளைப் பின்னிட்டு எல்லோருக்கும் பொது விடுமுறை நாட்களாகச் செய்ததுபோல, கத்தோலிக்கர்

களின் விசேஷ திருநாட்களாகிய நீறிடும் புதன்கிழமை, கர்த்தர் மோட்சத்துக் காரோகணமான திருநாள், திவ்ய நற்கருணைத் திருநாள், தேவமாதா மோட்சத்துக் கெழுந்தருளின திருநாள் ஆகிய இந்நாட்களை எல்லோருக்கும் பொதுவான விடுமுறை நாட்களாக உத்தரவு பிறப்பிக்கும்படி கவர்ண்மென்டாரை இக்கூட்டத்தார் வேண்டிக்கொள்ளுகிறார்கள்.''

(11) ஸ்ரீமான் ஏ. மாசில்லாமணிப் பிள்ளையவர்களால் :—

''கத்தோலிக்கு இந்தியர்கள் முன்னேற்றம் அடைவதற்கு இன்றியமையாதவையான கூட்டுறவு வர்த்தகசாலைகளைக் கத்தோலிக்கர்களிருக்கும் எல்லா விடங்களிலும் ஸ்தாபிப்பதற்குவேண்டிய வேலைகள் ஆரம்பிக்கப்படவேண்டியது.''

பிறகு, அக்கிராசனதிபதியவர்கள் எழுந்திருந்து தமது முடிவுரையாக, தற்காலத்து நவீன நாகரிகத்துக்கும், முன்னேற்றத்துக்கும் தக்கபடி கத்தோலிக்கர்கள் சுறுசுறுப்புடன் பொதுநலத்துக்காக உற்சாகமாக ஒத்து உழைக்கவேண்டுமென்றும், அவ்வாறு உழைக்காமற் போனால், முன்னேற்றமடைந்த மற்றைய வகுப்பினரால் அமுக்கப்பட்டு போவார்களென்றும், கல்வி விஷயத்தில் விசேஷமாய்ப் பெண் கல்வி விஷயத்தில் அவர்கள் முழு கவனத்தையுஞ் செலுத்தவேண்டுமென்றும், அவர்களுக்குள்ளிருக்கும் சில விகற்பங்களையெல்லாம் ஒழித்துவிட்டு, கத்தோலிக்கர்களெல்லாரும் ஒரு தாய் மக்கள்போல ஒத்து வாழ்வது அத்தியாவசியமென்றும், அப்படிச் செய்யாமற்போனால், கத்தோலிக்கர் கடைத்தேறுவது துர்லபமென்றும், விசேஷமாய்ச் சமீபத்தில் வரப்போகிற அரசியல் முறையில் செல்வாக்கடைய முடியாதென்றும், தென்னிந்தியாவிலுள்ள ஒவ்வொரு பங்கு விசாரணையிலும் ஒவ்வொரு கிளைச் சங்கம் ஸ்தாபித்து, தெ. இ. க. இந்தியர் சங்கத்தைப் பலப்படுத்தி, ஒற்றுமையாயும், பலமாயுமிருக்கிறோமென்று கவர்ண்மென்டாருக்குக் காண்பித்து, அவர்களிடமிருந்து வேண்டிய சுதந்தரம்பெற்று சுகமாய் வாழ முயற்சிசெய்யவேண்டுமென்றும் சொல்லி முடித்தார்கள்.

சபாநாயகர் அவர்களுக்கும், உபசரணைக் கமிட்டியார்களுக்கும், அர்ச். சவேரியார் பாடசாலைத் தலைவருக்கும் முறையே வந்தனங்கள் அளிக்கப்பட்டு, ''கடவுள் அரசரைக் காப்பாராக'' என்ற அரசர் வாழ்த்துப் பாடலுடன் கூட்டம் முற்றுப்பெற்றது.

SILVER JUBILEE OF THE REV. FR. L. X. FERNANDEZ.

எல். எக்ஸ். பெருனந்தீஸ் சுவாமிகளின் வெள்ளி ஜூபிலி.

சங்கைக்குரிய எம் குலத்தோரே! அன்புக்குரிய எம் சகோதரரே!

இந்த நாள் நமக்கு ஓர் சந்தோஷகரமான நாள், பாக்கியமான நாள், யோக்கியமான நாள், மும்முறை ஆசீர்வதிக்கப்பட்ட நாள். ஏனெனில் நம் குலத்தில், நம் பரதகுலத்தில், நம் ஞானப் பிதாவாகிய அர்ச். சவேரியாருடைய காலடிகளால் அர்ச்சிக்கப்பட்டதும், வீரமாமுனிவரென்னும் பேர்போன பண்டித சுவாமிகளின் திருக்கல்லறையைக் கொண்டதாகச் சொல்லப்படுகிறதுமான மணப்பாடென்னும் சிற்றூரில் பாரிக்குடும்பத்தில் பிறந்தவரான சங். லாரென்ஸ் சவியேர் பெருனந்தீஸ் சுவாமிகள் குருப்பட்டம் பெற்ற, 25-ம் வருட வெள்ளி ஜூபிலி என்னும் மகோற்சவ நாள்.

நாம் இன்னாளை உன்னத நன்னாளாகக் கொண்டாடுகிறோம். ஏனெனில், சங். சுவாமிகள் நம் குல முதல் குருவாகக் குருப்பட்டம் பெறப் பாக்கியம்பெற்றதால், அன்றுமுதல் இன்றுவரையும் நம் பரதகுலத்தை மகிமைப்படுத்துகிறார்; நம்மூரை மகிமைப்படுத்துகிறார்; நம் குடும்பத்தை மகிமைப்படுத்துகிறார். ஆகையால் நாம் இன்னாளை உன்னத நன்னாளாகக் கொண்டாட உரிமையும் கடமையுமுள்ளவர்களாயிருக்கிறோம். சங். லாரன்ஸ் சவியேர் பெருனந்தீஸ் சுவாமிகள் நான் முன்சொன்னதுபோல மணப்பாடென்னும் சிற்றூரில் பிறந்து வளர்ந்து கொளும்புமாநகரில் மிக்கத் திறமையோடு உயர்தரக் கல்வி பயின்று, கொச்சி நகரிலும், இந்தியாவின் ரோமாபுரியெனப் பெயர்பெற்ற கோவை

மாநகரிலும் வைதீக சாஸ்திரங்களை ஐயந்திரிபறக் கற்று சென்னைமாநகரின்கண் இந்து தேசத்து அப்போஸ்தலரான அர்ச். தோமையாரின் திருக்கல்லறையைக்கொண்டபுண்ய க்ஷேத்திரமாகிய திரு மயிலாப்பூரில் 1894-ம் வருஷம் கார்த்திகை மாதம் 25-ந் தேதி குருப்பட்டம் பெறப் பாக்கியம்பெற்றார். குருப்பட்டம் பெற்றதுமுதல் இந்த 25-வருஷங்களாக தேவதோத்திரத்திற்காகவும், தேசத்தின் நன்மைக்காகவும், தாம் காட்டிவந்த சுகிர்த மாதிரிகையினாலும், திவ்ய போதனையினாலும், பிறர்சினேகக் கிரியைகளினாலும், தம்முடைய பேரும் புகழும், சீருஞ் சிறப்பும், இந்தியா தேசத்திலும், இலங்கைத் தீவிலும், பர்மா, மலாக்கா, சிங்கப்பூர் முதலிய இராச்சியங்களிலும் மகிமைப் பிரதாபத்தோடு பிரகாசிக்கத் துவக்கினதுமல்லாமல், அவர் ஐரோப்பிய தேசங்களாகிய இங்கிலாந்து, அயர்லாந்து, போர்த்துக்கல், ஸ்பேயின், பிரான்சு, ஜெர்மனி, ஆஸ்திரியா, பெல்ஜியம், இத்தாலியா முதலிய இடங்களுக்கு யாத்திரையாய்ச் சென்றிருந்தபோது அவ்வவ்விடங்களிலுள்ள இராசாக்களும் ஏனையோரும், பட்டவர்த்தனரும், பிரபுக்களும் அவரை அன்புடன் வரவேற்று அவருடைய குணாதிசயங்களைக்கண்டு ஆனந்தித்து, அக்காலத்தில் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்குப்போன சவியேரைப்போல இக்காலத்தில் இந்தியாவிலிருந்து ஐரோப்பாவுக்குவந்த சவியேரென்ற பெறுதற்கரிய பேருஞ் சூட்டினார்கள்.

பிரசங்க சிங்கமெனப் பெயர்பெற்ற அந்த நல்ல குருவினுடைய உத்தம குணங்களாகிய தெய்வபக்தி, குருத்துவ உற்சாகம், பிறர்சிநேகம், பரோபகாரம், வேதாபிமானம், தேசாபிமானம், குலாபிமானம், பலபாஷா ஞானம், புத்தி தீக்ஷண்யம், வாய்ச்சாதுரிய சமயோசித சாமர்த்தியம், தொடுத்த கருமத்தை ஜெயத்துடன் முடிக்கும் வல்லமை ஆகிய அபூர்வ நல்லிலட்சணங்களைக் கண்ட மேற்றிராணிமார், குருக்கள், பட்டவர்த்தனர்,பிரபுக்கள், தனிகர், தாரித்திரர் எல்லாரும் அவரை ஏற்றிப் போற்றிப் புகழுகின்றார்கள். அவர் கையால் உபகாரம்பெற்ற ஆயிரக்கணக்கான பேர் அவரை அல்லும் பகலும் துதிக்கின்றார்கள். இவையெல்லாம நாம் நினைக்கும்போதும் பார்க்கும்போதும் கேட்கும்போதும் நமக்கு மகிழ்ச்சியும் புகழ்ச்சியும் உண்டாகின்றதன்றோ!

சங்கைக்குரிய எங்குலத்தோரே! நம் குலத்துங்கனாகிய அவர் நமக்கு யாதும் உபகாரங்கள் செய்யவில்லையோ? நாம் அவருக்குப் புகழ்மாலை சூட்டவேண்டியதில்லையோ? நாம் அவருக்கு நன்றியறிதல் காட்டவேண்டியதில்லையோ? யோசித்துப்பாருங்கள் பிரபுக்களே! சங். சுவாமிகள் நம் குலத்திற்குச் செய்ததும் செய்வதும் இனிமேல் செய்யப்போவதுமான அரிய பெரிய உபகாரங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, ஒருவர்க்கல்ல, இருவருக்கல்ல, ஒருவிதமல்ல, இருவிதமல்ல. பற்பலர்பேரிலும் பற்பல உபகாரங்களும் பற்பலவிதங்களிலும் செய்திருக்கிறார். அவையெல்லாம் இங்கு சொல்லப்புகின் விரியுமாதலால், அவற்றுள்மேலானதும் முதலாவதானதும் முக்கியமானதும் நம்மெல்லோருக்கும் தெரிந்ததுமான ஒன்றைப்பற்றிமாத்திரம் இப்போது சொல்லுகிறேன். அதாவது :—நாம் கிறீஸ்துவர்களாகி நாலு நூற்றாண்டுகளாகியும் நம்மைக் குருத்துவ அந்தஸ்திற்கு ஏற்றுக்கொள்ளக்கூடாதென்றிருந்த சங்கிலிக்கட்டைத் தகர்த்தெறிந்து நம்மில் முதற் குருவாய் அபிஷேகம்பெறப் பாக்கியம்பெற்றார் என்பதே.

அபிஷேகம்பெற்று நம் குலத்தார் குருத்துவ அந்தஸ்திற்கு அருகரென்றும், அத்தேவ ஊழியத்தை வெகு திறமையுடன் நடத்தக்கூடிய வல்லவர்களென்றும் உலகத்துக்குக் காட்டினார். காட்டி நம் குலத்தார் குருத்துவ அந்தஸ்திற்கேகும் வாய்க்காலொன்று வெட்டினார். அதன் பயனாக தென் இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள அதி வந்தனைக்குரிய மேற்றிராணிமார்கள் நம் குலத்தவரை குருத்துவ அந்தஸ்திற்குச் சேர்க்க ஆசைகொண்டார்கள். அவ்வாசைக்கிணங்க அவ்வாய்க்கால் வழியாய் நம் குலத்தவர் ஒன்றன்பின் ஒன்றாய்ச் சென்று கொழும்பு அதிமேற்றிராசனத்தில் ஒருவரும், கண்டி குருமடத்திலும், கொல்லம், திருச்சினாப்பள்ளி, மயிலாப்பூர் மேற்றிராசனங்களிற் பலரும் குருப்பட்டம் பெறப் பாக்கியம்பெற்றார்கள். தற்போது நம் குலத்தில் குருப்பட்டம் பெற்றவர்களும் பெறப்போகிறவர்களுமாக 25 திறமை வாய்ந்த புண்ணிய புருஷோத்தமரைச் சந்தோஷத்தோடு காண்கின்றோம். ஷை சுவாமிகள் ஆத்தும விஷயமாகவும் சரீர விஷயமாகவும் நம் குல முன்னேற்றத்திற்கவசியமான நன்மைகள் உண்டாகவும், தின்மைகள் விலகவும் என்னென்ன செய்யவேண்டுமோ அவை யாவும்

குறையறச்செய்து இராப்பகலாய் நமக்காகவே தம்மை முழுதும் பரித்தியாகம் செய்கின்ருரென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றதல்லவா? ஆகையால் நாம் அச் சுவாமிகளுக்கு பிரதிநன்றி காட்டவும், புகழ் மாலை சூட்டவும் கடமைப்பட்டவர்களாயிருக்கிருேம்.

சங்கைக்குரிய சுவாமிகளை நாம் நாவாலும் பாவாலும், ஏற்றினுலும் போற்றினுலும், பணத்தாலும் பவுசாலும், போஷித்தாலும் பூஜித்தாலும் அவையெல்லாம் அவருக்கு ஏற்ற புகழும் நன்றியுமாகாது. அவருக்கு ஏற்ற புகழும் நன்றியு மேதென்ருல் அவர் வெட்டிய வாய்க்கால் வழியாய்ச் செல்வதற்கு அவரைப்போலக் குருப்பட்டம் பெறுவதற்காக நாம் நம் இனத்தவரில் பலரை ஆயத்தப்படுத்தி அனுப்பிக்கொண்டிருப்பதேயாகும்.

கடைசியாய் நாம் எல்லோரும் சுவாமிகள் குருப்பட்டம் பெற்ற 25-ம் வருஷ ஜூபிலியை நாளது வருஷம் கார்த்திகை மாசம் 25-ந் திகதி கொண்டாடக் கிருபைபுரிந்த சர்வேஸ்வரனுக்குத் தோத்திரம்புரிந்து, சர்வேஸ்வரனுடைய தோத்திரத்திற்காகவும் நமது நன்மைக்காகவும் அவர் சுகசீவியராய் இன்னும் பல்லாண்டு வாழும் பொருட்டும், சங். சுவாமிகளின் 50-வது வருஷ பொன் ஜூபிலியையும் நாம் கொண்டாடும் பாக்கியம் நமக்குக் கிடைக்கும்படிக்கும், அந்த மகா மகா மகோற்சவ தினத்தில் நம் குல குருக்கள் நூறுபேரும் நம்குல மேற்றிராணிமார் இருவர் அல்லது ஒருவருமாவது சர்வேஸ்வரனுடைய ஊழியத்தில் இருக்கிருர்களென்ற சுபசேதியைக் கேட்டு ஆனந்தங்கொண்டு, நாமும் நம் குல முதல் குருவும் களிகூரும்பொருட்டு பிதா சுதன் இஸ்பிரீத்துசாந்துவாகிய திரியேக சர்வேஸ்வரனைத் திரிகாலமும் பிரார்த்திப்போமாக.

ஓர் பரதன்.

கண்ணீரைத்தான் விட்டுள் ளசுத்தம் போக்கிக்
காரண சற்குருவினுற் கசட்டைப் போக்கி
வெண்ணீராமாதி திரு வேதாந்தத்தின்
வீடேக வேணுமென்ருல் விரும்பிக் கேளு
தண்ணீரை யுருவேற்றித் தியானஞ்செய்து
சச்சிதானந்தனையே சரணஞ்செய்து
கண்ணீரைவிட்டழுது கசட்டைப் போக்கி
கரைசேர வேணுமிதைக் கைக்கொள்வீரே.

—அகஸ்தியர் ஞானம் 30.

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர். ப—ர்.]

என் சுற்றுப்பிரயாணம்.
நான் பட்டபாடு.

சென்ற டிசம்பர்மீ 28, 29-ம் தேதிகளில், தூத்துக்குடியில் நடைபெற்ற தெ. இ. க. இந்தியர் சங்கத்தின் 22-வது வருஷாந்தரப் பொதுக் கூட்டத்திற்குச் சென்றிருந்த யான் ஷை சங்கத்திற்கு அதிக அங்கத்தினர்களைச் சேர்க்கும் நோக்கத்துடன் தூத்துக்குடிக்குத் தெற்கேயுள்ள சில கிறீஸ்துவக் கிராமங்களுக்குப் போயிருந்தேன். பழயகாயல், பின்னைக்காயல், மணப்பாடு, வீரபாண்டியன்பட்டினம் ஆகிய இந்த நான்கு ஊர்களுக்குத்தான் நான் போகக்கூடியதாயிருந்தது. இன்னும் அநேக இடங்களுக்குச்சென்று அநேக அங்கத்தினர்களைச் சேர்த்து, சங்கத்தைப் பலப்படுத்தி, அரசாங்கத்தார் முன்னும், இதர வகுப்பினர் முன்னும், கத்தோலிக்கு இந்திய ஜன சமூகம் மகா வலிமையும் பெருமையும் பொருந்தியதெனக் காட்டப் பேரவாக்கொண்டுள்ளேனாயினும், மேற்கண்ட நான்கு ஊர்களுக்குப் போகும் பிரயாணத்தில் நான் எதிர்பாராதவிதமாய்ப் படவேண்டியிருந்த சங்கடங்கள், அசௌகரியங்களை முன்னிட்டு, என் பிரயாணத்தை அவற்றேடே நிறுத்திக்கொண்டேன். பட்டபாடென்ன, கேடென்னவென்று சிலர் கேள்வி கேட்கலாம். அவர்களுக்கும், மோட்டார்வண்டி, டிராம்வண்டி, கோச்சு, ஜட்கா முதலிய பல வாகன சௌகரியங்கள் எளிதில் கிடைக்கப் பெறும் பட்டணத்திலிருந்துகொண்டு, பொது நலக் காரியார்த்தமாய் கிராமந்திரங்களுக்குப் பிரயாணஞ்செய்பவர்களின் கஷ்ட நஷ்டங்களையறியாதார்க்கும் இப்பிரயாணத்தின் என் அநுபவங்களை ஒரு சிறிது சங்க்ஷேபமாய்க் கூற சங். பத்திராதிபர் விடையளிப்பாரென அவரது தயையை யிரந்து வேண்டுகிறேன்.

பழயகாயல். — தூத்துக்குடியிலிருந்து இவ்வூருக்குப்போக இரண்டு பாதைகளுண்டு. ஒரு பாதை 10 மயில் தொலையுள்ள சுருக்கமானது. இது சதுப்பு நிலமுள்ளதாதலால், இம் மழைகாலங்களில் பாதசாரிகளுக்குக் கால் நிலத்துக்குள் முழங்கால்வரையும் புதையுமென்பது

புற்றி $6\frac{1}{2}$-ரூபாய் வாடகைகொடுத்து வண்டி யொன்றுகொண்டு, 14 மயில் தூரமான மற்றொரு பாதையாய்ப் போகலானேன். இந்தப் பாதையில் ஒரு பகுதி மேடும் பள்ளமும், சேறும் சகதியுமாயிருந்ததால், வண்டிசெல்வதும் கஷ்ட சாத்தியமாயிருந்தது. பல பாகங்களில் வண்டியினின்று மிறிந்து நடக்கவேண்டியதாயிற்று. தூத்துக்குடியில் பெரியகோவில் சுவாமியாரைக் காண்பதற்குப் போனவிடத்தில் அவர் அரைக்குள் அவரைக்கண்டு பேசிவிட்டுத் திரும்பின ஐந்து நிமிஷத்துக்குள், வெளியே நான் விட்டுப் போயிருந்த பாதரட்சையை யெந்தப் பாதகனோ கொள்ளைகொண்டு சென்றானதலால், நடக்கையில் அங்கு மிருந்திருந்த முள்ளுங் கல்லுங் காலில் தைக்கப் பெருங்கஷ்டத்துக்காளானேன். ஓரிடத்தில் கால்வாயைக் கடக்கையில், வண்டிக்குள் ஜலமேறி, என்னை யெழுந்து குனிந்து நிற்கச்செய்ததுமன்றி, வண்டியிலிருந்த என் சாமான்களையும் நனைத்துவிட்டது. கடைசியாய்க் காயலையடைந்து, அங்குள்ள நண்பர்களால் பெரிதும் உபசரிக்கப்பெற்றேன். அவர்களுடைய உதவியால், 10 புது மெம்பர்களைச் சேர்ப்பித்தேன். இப்பொழுது அவ்வூரில் 36 அங்கத்தினர்களிருக்கிறார்கள். பழயகாயலானது ஒரு சிறு அழகிய சுத்தமான கிராமம்.

பின்னைக்காயல்.—பழயகாயலுக்கும் பின்னைக்காயலுக்குமுள்ள மூன்று மைல் தூரத்துக்குள் ஆறு ஆறுகளைக் கடக்கவேண்டியதாயிருந்தது. இவற்றுள் இரண்டு பெரிய ஆற்றில் இடுப்பளவு ஜலத்திலிறங்கிச் சென்றேன். இப்பிரயாணத்தில் சற்றேறக்குறைய முழுதும் ஜலக்காட்டைக் கடக்கவேண்டியதாயிற்று. இவ்விடத்தில் தாம்பிரபாணி ஆறானது மூன்று பிரிவாய்ப் பிரிந்து சமுத்திரத்தில் சங்கமமாகின்றது. இதோடுகூட, ஓயாமல் மழையும் பொழிந்தது. இத்துணைக் கஷ்டத்துடன் பின்னைக்காயல் சென்று, அங்குள்ள இரண்டு விசாரணைக் குரு சுவாமிகளையுங்கண்டு பேசியதில், அங்கத்தினர்களைச் சேர்க்க அது தக்க சமய மல்லவென்று அவர்கள் சொல்ல, சும்மா திரும்பிவரலானேன். ஆயினும், அவ்விரு சுவாமிகளும் அவ்வூர் கிராம முன்சிபும், பெரிய தனக்காரரும் பின்னிட்டு சங்க விஷயத்தில் ஊக்கஞ் செலுத்துவதாய் தயவுடன் வாக்களித்திருக்கிறார்கள்.

மணப்பாட்டுப் பிரயாணம்.—காயலுக்கும் மணப்பாட்டுக்கும் 26 மைல். இப்பிரயாணத்தில் நான் பட்ட தொந்தரை சொல்லுந்தரமல்ல. காயலிலிருந்து ஆத்தூர்வரையில், சிறிது தூரம் வெள்ளத்தின்மேலும், மற்றதூரம் கணுக்கால் முழங்கால் ஜலத்திலும், கல்லிலும் முள்ளிலுமாக நடந்து (வண்டி செல்லாத பாதை) போக நடுவில் தாம்பிரபாணி நதி குறுக்கிட்டது. இருகரையும் வெள்ளம் புரண்டோடினது. மரம், செடிகளையும், பானை, பாய் முதலிய சாமான்களையும், ஒரு மாட்டையும் ஜலப்பிரவாகம் உருட்டிப் புரட்டிக்கொண்டு, பேரிரைச்சலிட்டு அதிவேகமாய்ப் போவதைக்கண்டு திகிலுற்றேன். ஆற்றில் வெள்ளம் பெருக்குற்றிருப்பதினால், ஆபத்துக் கிடமாமென்று வள்ளக்காரன் வள்ளத்தை விடேன் என்றான். ஆற்றைக் கடந்து அக்கரை செல்வதெப்படியென வுன்னித் திக்பிரமைகொண்டு திரும்பிப்போகலாமாவென்று திகைத்து நிற்கையில், தெய்வாதீனமாய் ஆத்தூரில் சாமான் கொள்ள பின்னைக்காயல் வள்ளமொன்று பாய்விரித்து வர, அதைக்கொண்டு அக்கரைசென்று பின்னும் நடந்து குறும்பூரைக் கிட்டிவருகையில் அங்கு பெரிய வடிகால் ஒன்று குறுக்கிட்டது. அதில் ஜலம் கழுத்தளவு சென்றது. கணுக்கால் ஆழத்துக்குமேலான ஜலத்தில் கால்வைத்தறியாத நான் கழுத்தளவு ஜலத்தைக் கடந்துசெல்வதானால் என் மனோநிலை அச்சமயம் எவ்வாறாயிருந்திருக்குமென்பதை வாசிப்பவர்கள் ஊகித்துக்கொள்ளலாம். என்செய்வது? கருமமே கண்ணாயினார்க்குக் கடினமானதொன்றுமில்லை யல்லவா? ஆகவே மனத்துக்கு ஒருவாறு தைரியஞ் சொல்லிக்கொண்டு, என் உடுப்பையெல்லாங் களைந்து மூட்டைகட்டித் தலைமீது வைத்துக்கொண்டு, ஒவ்வொரு அடிக்கும், "சேசுவே, சேசுவே" என்று சேசுநாமபாராயணம் பண்ணிக்கொண்டு, அடிமேல் அடிவைத்து ஆற்றைக் கடந்தேன். அங்கிருந்து திருச்செந்தூருக்குப் போவதாயிருந்த மோட்டார்பஸ் வண்டியிலேறி உட்கார்ந்தேன். அப்போது மூன்றரை மணியிருக்கலாம். அந்த வண்டியின் டிரைவர் வண்டியை இதோ விடுகிறேன், அதோ விடுகிறேன் என்று சொல்லி என்னையும், என்னுடனிருந்த மூன்று பிரயாணிகளையும் காக்கவைத்திருந்துவிட்டு, மணி ஐந்தரையானபோது எதிர்வண்டி வாராமல் நானிதைவிடமாட்டேனென்றான். பாளையங்கோட்டைப் பாதையின் பல விடங்கள் தண்ணீர்ப் பெருக்கினால் பழுதுற்றிருந்ததனால் எதிர்வண்டி

இப்போதுதான் வருமென்பதற்குத் திடமில்லை. ஆகையால், என்னுடனிருந்த மூவீரும் வண்டியினின்றிறங்கி நடக்கத் தலைப்பட்டார்கள். நான் மாத்திரம் அவ்வண்டியிலிருந்து என்செய்வது? பொழுது போயிற்று. நானும் இறங்கினேன். காலையிலிருந்து நடந்து அலுத்திருந்தேனாயினும் நான் நடக்கப் பின்வாங்கவில்லை. ஆனால், என்னிடமிருந்த டிரங்குப்பெட்டியும், படுக்கையுமாகிய சாமான்களை யெடுக்க ஆளில்லை. இவைகளைக் குரும்பூர்வரையில் கொண்டுவந்த கூலியாளை, மோட்டார் பஸ்ஸைக்கண்டதும், அனுப்பிவிட்டேன். மிகப் பிரயாசைப்பட்டு ஒரு ஆளைத்தேடிப்பிடித்துச் சாமான்களை அவன் தலைமீதேற்றிக்கொண்டு பிரயாணப்பட்டேன். திருச்செந்தூர்போக ஏழு மைல் நடக்கவேண்டியிருந்தது. ஆகவே, அதி வேகமாய் நடந்துசென்றேனாயினும், மூன்று மைல் நடப்பதற்குள் பகலவன் ஓடி ஒளித்துக்கொள்ள இருள்வந்து கப்பிக்கொண்டது. மணி ஏழாயிற்று. திருச்செந்தூருக்கு இன்னும் நாலைந்து மைல் தூரமிருந்தது. கால் வலித்தது; பசிக்களை வந்தது; இராப்பொழுது எங்கு தங்குவது என்னும் கவலை மிகுந்தது. கடவுளே உன் தஞ்சமென நெஞ்சிற்கருதி, அங்கு எதிர்ப்பட்ட ஒரு குக்கிராமத்தைச் சேர்ந்து, அங்கு கிறீஸ்தவர்கள் வீடு யாதேனுமுண்டோவெனக் கேட்டுச்சென்றேன். ஒரு சிறு கிறீஸ்துவக்கோவில் தென்பட்டது. அது புரோடஸ்டாண்டார் கோவிலென்றும், அவ்வூர் கீழ்ப்புதுக்குடியென்றும் தெரியவந்தது. அக்கோவிலினருகே சென்று அதன் உபதேசியார் யாரெனக் கேட்டு, அவர் இல்லத்தை நாடிப்போனேன். உபதேசியாரைக் கண்டதும் அவருக்கு வந்தனஞ்சொல்லி "ஐயா, நான் ஒரு கிறீஸ்துவன். ரோமான் கிறீஸ்துவன். மணப்பாட்டுக்கு போக வந்தேன். தண்ணீர் சங்கடத்தால் மோட்டார் வண்டி போகவில்லை; வேறு வண்டியும் சிக்கவில்லை. இந்த இராப்பொழுதுக்கு மாத்திரம் தங்க சற்று இடம் தருவீராகில், சர்வேசுரன் உமக்குத் தயைசெய்வார்" என வேண்டிக்கொண்டேன். "இடம் வேண்டுமானால், இந்தக் கோவில் பள்ளிக்கூடத்தில் இடந்தருவேன். சாப்பாட்டுக்கு என்ன செய்வீர்?" என்றார். அதற்கு "ஐயா, தங்க இடந்தரச் சம்மதித்ததற்காக உமக்கு மெத்தவும் வந்தனம். இங்கே பலகாரம் ஏதாவது கிட்டுமானால் அதை வாங்கிப் புசித்துக்கொள்ளுகிறேன். இல்லாவிடில் பட்டினி கிடக்கத் தயாராயிருக்கிறேன்" என மொழிந்தேன். இதைக் கேட்ட உபதேசியார் சற்றுமனங்கசிந்தவராகி, என்னசொல்வதென்று தெரியாமல், சிறிதுபொழுது மௌனமாயிருக்கையில், அவருடனிருந்த அவர் பத்தினியார் "ஐயோ பாவம், இங்கே அவருக்குச் சாப்பாடு எங்கே கிடைக்கும்! நாம் சாப்பிடுவதில் சிறிதளவு கொடுத்தால் சாப்பிட்டுப்போகிறார்" எனவே, உபதேசியார் "ஆஹா! இடுகிறவர்களுக்கு இஷ்டமானால் எனக்கொன்றும் ஆட்சேபமில்லை, சந்தோஷமே" எனச்சொல்லி சதிபதியாகிய இருவரும் ஏகோபித்து எனக்கு, உண்டி, இருக்கை, படுக்கை முதலியன உதவி என்னையன்பாய் உபசரித்தார்கள். சர்வேசுரன் அவர்களை ஆசீர்வதிப்பாராக! இவ்வாறு இரவையங்கு கழித்து, அதிகாலையில் எழுந்து, அவர்களுக்கு நன்றியறிந்த வந்தனம் செலுத்திவிட்டு, வழி நடந்து திருச்செந்தூருக்குப்போய், டிராலியேறிக் குலசேகரப்பட்டினம் சேர்ந்து, அங்கிருந்து மணப்பாடென்னும் திருநகரை யடைந்தேன்.

மணப்பாடு.—இதனைத் திருநகர் என்பதற்கோர் ஆட்சேபனையில்லை. ஏனெனில், அதற்கு ஒரு மைல் தூரத்திலிருக்கும், குலசேகரப்பட்டினத்திலிருந்து அதை நோக்குங்கால், அதனிடத்தே தோன்றும் குன்றும், குன்றின்மேலுள்ள கோவிலும், குருசடிகளும், தீபஸ்தம்பமும், காரடுத்த சோலையினூடே ஆங்காங்குக் காணப்படும் மாளிகைச்சிகரங்களும், காண்பவருடைய மனத்தில், அதன்மாட்டு ஒரு கெம்பீரமான எண்ணத்தை யுண்டுபண்ணுமற் போகா. அந்நகரினுட் புகுந்துபார்த்தாலோ, அங்குள்ள பல சிறு மாடகூடங்களினழகும், வீதியழகும், வீட்டழகும், கோவிலழகும், கோவிலுக்குச்செல்லும் ஆடவர் அரிவையர் அடக்க ஒழுக்கத்தினழகும், கோவிலில் பூஜை, தூபதீபாராதனைகள் செய்யப்படும் செம்மையழகும், திவ்யசற்பிரசாதமருந்துவோரின் மேரை மரியாதையினழகும் செப்பத்தரமல்ல. இவையனைத்தையும், குன்றின்மேலுள்ள குருசுக்கோவிலையும், அக்கோவிலுக்குச் செல்லும் பாதையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும், 14 ஸ்தலங்களைக் குறிக்கும் 14 குருசடிகளையும் உத்தேசித்து மணவைநகருக்குத் "தென் ஜெருசலேம்" எனப் பெயரிடுவது மிகப் பொருத்தமானது. இக்காட்சிகளையும், சிந்துதேசத்து அப்போஸ்தலராகிய அர்ச். சவேரியார் வசித்திருந்த

குகையறையையும் கண்ட எனக்கு, நான் வழியிற்பட்ட பாடுகளின் நினைவு பஞ்செனப் பறந்துபோக, அவை முழுதும் பரிகாரமாயின. அக்காட்சிக்கும், அவ்வூரார் எனக்குச்செய்த பரிவான உபசாரங்களுக்கும், அவற்றைவிடப் பதின்மடங்கு பாடுபட்டாலும் பரவாயில்லை யென எண்ணலானேன். சங்கவிஷயத்திலும் சில நண்பர்களினுதவியால், ஒரு ஆதாரணைக் கர்த்தரும் (Patron), 13 ஆயுள் அங்கத்தினர்களும் (Life Members) சேர்ந்தார்கள். வியாபார் விஷயமாய் இலங்கைக்குச் சென்றிருக்கும் இன்னும் அநேக நண்பர்களும் கூடியசீக்கிரத்தில் ஆயுள் அங்கத்தினராவார்களென்னும் நம்பிக்கை எனக்குண்டு.

வீரபாண்டியன்பட்டினம்.—இவ்வூருக்குப் போகும் வழியிலும் ஜலக்காட்டைக் கடக்க வேண்டியதாயிருந்தது. இவ்வூருக்குப் போகுமுன்னே, ஆலந்தலைக்குப்போய் அங்கிருந்த சிரேஷ்ட சுவாமியாராகிய சங். மாஹி (Rev. Fr. Mahe S. J.) சுவாமிகளைக்கண்டு அவர்களிடமிருந்து, பட்டினத்துப் பங்கு சுவாமிகளுக்கு ஒரு கடிதம் பெற்றுக்கொண்டு போனேன். அச்சுவாமிகள் அன்றுதானே பாளையங்கோட்டைக்குப் போய்விட்டதால், அவர்களைக் காணவும், சங்க வேலை யொன்றுஞ் செய்யவு மியலாமற் போய்விட்டது. எனினும், அங்குள்ள சில முக்கிய மெம்பர்களைக்கொண்டு, ஒரு சிறு கூட்டங் கூட்டுவித்து, அக்கூட்டத்தினருக்கு, என்னுடன் எனக்குச் சகாயமாக வந்திருந்த ம-ா-ா-ஸ்ரீ சி. ஏ. சில்வெயிராப் பண்டிதரவர்களும் நானுமாக, சங்கத்தின் கருத்துக்களையும், அதனால் கத்தோலிக்கர்களுக்குண்டாகக்கூடிய நானாவித நன்மைகளையும் ஒருவாறு விளக்கிக்காட்டினோம். பங்கு சுவாமிகள் வந்ததும், அங்கு ஒரு கிளைச் சங்கம் ஸ்தாபிப்பதாகவும், அதிக அங்கத்தினர்களைச் சேர்த்து அதைப் பலப்படுத்துவதாகவும் அவர்கள் வாக்களித்தார்கள். அவர்கள் எங்களுக்குச்செய்த உபகாரங்களுக்கு நாங்கள் பெரிதும் நன்றிபாராட்டுகிறோம். இவ்வூரிலுள்ள கோவிலும், கோவிற் கோபுரங்களும், அர்ச். லூர்து ஆண்டவளின் கெபியும் மெத்த சிறப்பும் அழகும் வாய்ந்தவையாயிருக்கின்றன. இவ்வூரிலும் மணப்பாட்டிற்போல, பாரிய வியாபாரிகள் அழகிய மாளிகைகளை அமைத்து பெருவாழ்வு வாழ்கிறார்கள். கரைதுறைப் பட்டணங்களிலுள்ள கத்தோலிக்குச் சகோதரர்கள் சகல சம்பத்தும்பெற்று நீடூழிவாழ்க!

சென்னை, 20—1—20. M. P. KULANDAISWAMI, உதவி காரியதரிசி, தெ. இ. க. சங்கம்.

சேசுவின் திரு இருதய மதுவிலக்குச் சபை, மாத்தூர்.

இரண்டாம் வருடத்திய பொதுக்கூட்டம்.

கும்பகோணம் மேற்றிராசனத்தைச் சேர்ந்த, மாத்தூர் பங்கிலுள்ள ஷை மதுவிலக்குச் சபையின் இரண்டாம் வருடத்திய பொதுக்கூட்டம் 18—1—20தில் ஞாயிற்றுக்கிழமை ஷை யூரில் சிறப்புடன் நடைபெற்றது. அன்று காலை சபையார் அனைவரும் (73 மெம்பர்கள்) ஒழுங்காய் அணிவகுத்துத் தங்கள் சபைக் கொடியுடனும் பஜனையுடனும் தேவாலயத்திற்குச் சென்று, திருப் பலிபூசைகண்டு திவ்யசற்பிரசாதப் பந்தியிலமர்ந்தனர்.

காலை 10 மணிமுதல் பகல் 1 மணிவரை மிக்க விமரிசையாய்ப் பஜனை நடைபெற்றது. சபையாருக்காகவே தயாரித்த நேர்த்தியான விருந்தை $1\frac{1}{2}$ மணிக்குச் சபையார் அனைவரும் உண்டு களித்தனர்.

மாலை 3 மணிக்குக் கூட்டம் ஆரம்பமானது. மாத்தூர் பங்குவிஜாரணைக் குருவும், இச்சபையின் டைரெக்டருமாகிய இராஜரிஷி சங். ஜே. எப். மால்பிரட் (J. F. Malfrait) சுவாமிகள் அக்கிராசனம் வகிக்க, மணவாளநல்லூர் R. C. பாடசாலைத் தலைமை உபாத்தியாயரும், சபையின் உத்யோகஸ்தரிலொருவருமான S. சிலுவைமுத்துப்பிள்ளை, சென்ற வருடத்திய ரிப்போர்டை வாசித்தார். பின்னர் சபைத் தலைவரான ஸ்ரீமத் M. அடைக்கலசாமிப் பிள்ளையவர்களெழுந்து, 'இவ்வருடத்தில் நாம் செய்ய வேண்டியது யாது?' என்பதாகச் சாதுரியமாய்ச் சுமார் $\frac{1}{2}$ மணி நேரம் பிரசங்கித்தனர். அப்பால், மாத்தூர் பங்கு உபதேசியாரும், சபையின் கௌரவப் பொக்கிஷாதிபருமான மகா-ா-ா-ஸ்ரீ V. பிரான்சீஸ் பிள்ளை யெழுந்து, 'ஒற்றுமை' என்னும் விஷயத்தின்பேரில் உபந்நியாசஞ்செய்தனர். பிறகு சபை உத்யோகஸ்தரிலொருவரும் கொத்தங்குடி R. C. பாடசாலைத் தலைமை உபாத்தியாயருமான Mr. S. சந்தியாகு பிள்ளை யெழுந்து, 'நாம் மற்றவர்க

ளுக்கு நன்மாதிரிகையாயிருக்கவேண்டிய தவசியம்' என்று விரிவாய் எடுத்தோதினர்.

பின் அக்கிராஸனாதிபதியவர்கள் எழுந்து மலர்ந்த முகத்துடன் மேல்நடந்த விஷயங்களைத் தொகுத்துக்கூறி, 'சபையார் அநுசரிக்க வேண்டிய ஒழுங்குகள்' விஷயமாய் இன்சொற்கள் கூறி, ஆசனத்தமர்ந்தனர். அதன் பின்னர் அக் கிராஸனாதிபதியவர்கட்கும், சபைத் தலைவருக்கும், கௌரவப் பொக்கிஷாதிபருக்கும் முறையே புஷ்பஹாரங்கள் சூட்டப்பட்டன. பின்னர், மங்களமும், பாப்பாண்டவர்மீது புகழும், இராஜ வாழ்த்துதலும்பாடி யாவருக்கும் புஷ்பம் சந்தனம் தாம்பூலம் உபசரிக்கப்பட்டு இக்கொண்டாட்டம் மாலை $5\frac{1}{2}$ மணிக்கு முடிவு பெற்றது. இவ்வூரிலும், இதைச் சுற்றிலுமுள்ள பல விடங்களிலுமுள்ளவர்களில் இன்னும் அநேகர் இச்சபையிற் சேர்ந்து நன்மை பெற்றுய்யுமாறு சேசுவின் திரு இருதயம் கிருபைபுரிவதாக !

இங்ஙனம்,
சபை மெம்பர்களிலொருவர்.

மயிலாப்பூர்.

சென்ற மாதம் 12, 13, 14-ம் தேதிகளாகிய மூன்று நாட்களிலும் சந்தோம் ஹைஸ்கூல் கத்தோலிக்குப் பிள்ளைகளுக்கு அர்ச். தோமையார் குரு மடத்துக்கோவிலில் ஞான ஒடுக்கம் நடந்தது.

சென்னை அதிமேற்றிராசனத்தைச்சார்ந்தவரும், ஞானுனுபவத்தில் தேர்ச்சியடைந்தவரும், தமிழ்ப்பாஷையை நன்குணர்ந்த தமிழ்க் குருமார்களில் ஒருவருமாகிய சங். மிக்கேல்நாத சுவாமிகளவர்கள் தெளிவான நடையில் எளிதில் சிறியவர்களும் கண்டுணரும்படியாக ஞான ஒடுக்கம் கொடுத்தார்கள்.

சுவாமிகள் கொடுத்த ஞான ஒடுக்கத்தில் சிறு பிள்ளைகளைச் சர்வேசுரன் எவ்விதம் சிநேகிக்கிறாரென்றும், அவ்விதம் தம்மால் சிநேகிக்கப்பட்டவர்களைக் கெடுப்போர்க்கு எவ்வித தண்டனை விதிக்கிறாரென்றும், சிறுவர்களாகிய யாங்கள் சர்வேசுரனுக்கு எங்ஙனம் நடக்கவேண்டுமென்றும், அங்ஙனம் நடவாமலும் நடக்க ஆசை வந்தாலும் அதனைப் புறத்தே தள்ளிவிட்டு இலௌகீக வசத்தராய்ச் சகல பாவாக்கிரமங்களையும் கட்டிக்கொள்ளுவதனால் வரும் நித்திய கேட்டையும், இழக்கப்படும் நித்திய சம்பாவனையையும் இனிது எடுத்தோதி, பற்பல சரித்திரங்களால் அவற்றைத் தெற்றென விளக்கிக்காட்டினார்கள்.

"ஒருவன் இவ்வுலகமுழுவதையும் தன் வசமாக்கிக்கொண்டாலும் தன் ஆத்துமத்தை இழந்துபோவானாகில் அவனுக்கு வரும் இலாபமென்ன"? என்னும் திருவாக்கியத்தைச் சுவாமிகள் அடிக்கடி எமது ஞான ஒடுக்கத்தில் சொன்னவாறு, நாங்கள் எங்கள் ஆத்துமத்தை இழப்போமாகில், நாங்கள் அடையும் இலாபமென்ன? ஒன்றுமில்லை. அங்ஙனம் இழக்காமல் இருக்கும்படி எங்கள்மீது தயைகூர்ந்து போதிக்கவந்த எங்கள் பிரிய ஞானத் தந்தைக்கு எம் மனமார்ந்த வந்தனமளிப்பதோடு அவர் பல்லாண்டு வாழப் பரம்பொருளைப் பிரார்த்திக்கின்றோம்.

கடைசியாய் 15-ம் தேதியாகிய வியாழக்கிழமை காலையில் "தேதேயும்" என்னும் தேவதோத்திரப்பாடல் பாடித் திவ்யநற்கருணை ஆசீர்வாதத்தோடு எங்கள் தியானம் முடிவுபெற்றது.

17—1—20. இப்படிக்கு,
சந்தோம் ஹைஸ்கூல் மாணவர்.

கூட்டப்புளி

பரதகுல வாலிபரிடையில் உலாவிவரும் உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமாக்களின் சகாய சபை.

இச்சபையானது 1912ஆ மே மாதம் பரிசுத்த தேவதாயாரின் பாதுகாவலின்கீழ் துவக்கப்பட்டு நாளதுவரை ஏறக்குறைய 150 வாலிபர்களால் நடைபெற்றுவருகின்றது. இச்சபைக்குத் துவக்கத்தில் அநேக இடையூறுகளிருந்தபோதிலும் அவைகளெல்லாம் பரிசுத்த தேவதாயாரின் மன்றாட்டால் நீங்கிப்போக, அது முட்கள் நடுவில் உதித்த லீலிமலர்போல் பிரகாசித்துவருகின்றது. இச்சபை தோன்றிய நாள் துவக்கி, வாரத்தில் திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் சபையார்கள் திருச் சிலுவையை ஏந்தி, தெரு வீதிகளைச்சுற்றி குறிக்கப்பட்ட ஆத்துமங்கள் இளைப்பாற்றிக்காக வேண்டுதல் செய்வதோடு, மாதங்களில் தவறாமல் திவ்யபூசையும் செய்யப்பட ஏற்பாடுசெய்கிறார்கள். இச்சபைத் திருநாள் சென்ற நவம்பரில் வெகு சிறப்பாய்க் கொண்டாடப்பட்டு, கடைசி

நாளாகிய 29-ந் தேதி வெஸ்பர்ஸ் என்னும் மாலை ஆராதனைகளோடும் மறுநாள் காலையிற் பாடற் பூசையோடும் முடிவுபெற்றது. இச்சபை ஈடேற்றத்திற்காக உதவி செய்த பக்தர்களுடைய ஆத்தும சரீர நன்மைகளுக்காக வெகு நன்றியறிதலோடு ஜெப ஆராதனைகளும் நிகழ்ந்தன. மேலும் இச்சபைக்கு உதவியாகக் கொடுக்கும் பரோபகாரிகளுடைய நன்கொடைகள் வெகு நன்றியறிதலோடு ஏற்றுக்கொள்ளப்படும்.

இங்ஙனம்,

உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமாக்களின் சகாய சபை.

J. M. அடைக்கலம் கோம்ஸ்.

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாசாரம்.

பாப்பு ஸ்தானாதிபதி.—அர்ச். பாப்பானவரின் இந்திய ஸ்தானாதிபதியாக புதிதாய் நியமனம்பெற்ற மேன்மைதங்கிய பீட்ரோ பிசானி ஆண்டவரவர்கள், சென்ற டிசம்பர் மாதம் 21-ந் தேதியாகிய அர்ச். தோமையார் திருநாளன்று மேற்றிராணியாராக அபிஷேகம் பண்ணப்பட்டபின், ஜனவரி மாதம் 18-ந் தேதி மார்சேல்ஸ் நகரத்தைவிட்டு இந்தியாவுக்குப் பிரயாணப்பட்டுவிட்டார். இந்த பெப்ரவரி மாதம் 10-ந் தேதி பம்பாய்வந்து சேர்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

மாஜி கெய்ஸரின் விசாரணை.—சமாதான உடன்படிக்கையின் 227-வது பிரிவின்படி, கெய்சரை விசாரணைக்கு அனுப்பவேண்டுமென்று பிரான்சு மந்திரியால் உலாந்தா கவர்ண்மென்டாருக்கு அனுப்பிய கடிதத்துக்கு, அந்தக் கவர்ண்மென்டார், ஜெர்மனியும் சேர்ந்து கேட்டாலன்றி கெய்ஸரை அனுப்பமுடியாதென்று பதில் தெரிவித்திருக்கிறார்களாம். இந்த விஷயம் எப்படி முடிவுபெறுமோ தெரியவில்லை.

சங். துரை ரேழிஸ் சுவாமிகளின் தேகவியோகம்.—கும்பகோண மேற்றிராசனத்தைச்சேர்ந்த சங். துரை ரேழிஸ் சுவாமியார் சென்ற ஜனவரி௴ 21-ம் தேதி இரவு தமக்கு நெடுநாளாயிருந்த இருதய நோவால், தமது 47-ம் வயதில், கடைசித் தேவத்திரவியாநுமங்களையாவும் பெற்று, அமைதியாய் நன்மரணமடைந்தாரென்று கேள்வியுற்று விசனமடைந்தோம். இந்த நல்ல குருவானவர் கும்பகோணத்தில் முதலிமார் குலத்தில் உத்தம தாய் தந்தையரிடமாய்ப் பிறந்து, எப். ஏ. பரீட்சை கொடுத்து பி. ஏ. பரீட்சைக்குப் படிக்கையில், தேவ அழைப்புக்கு இசைந்து, புதுச்சேரி குருமடத்தைச் சேர்ந்து 1903௵ ஜூன்௴ 20-ம் தேதி குருப்பட்டம் பெற்றார். ஆகவே, இவர் தேவனுடைய திராட்சைத் தோட்டத்தில் பதினாறு வருஷம் ஊழியஞ் செய்தார். இவர் தேகசௌக்கியத்துக்காக கூடலூருக்கு வந்தவிடத்தில் ஒருவாறு தேறிவருகிறாப்போலிருந்து, திடீரென அசௌக்கியமுற்று அம்பரன் திருவடி சென்றார். இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக நமது சந்தாதார நண்பர்கள் அனைவரும், ஒரு பர., பிரி., திரி. வேண்டிக்கொள்ளக் கோருகிறோம்.

மாகாண சட்ட சபை அங்கத்தினர்.—சென்னைச் சட்ட சபையில் 118 பேர்கள்; பம்பாய் 111; வங்காளம் 125; ஐக்ய மாகாணம் 118; பஞ்சாப் 83; பீஹார், ஒரிஸா 98; மத்திய மாகாணங்கள் 70; ஆஸாம் 53. சென்னைச் சட்ட சபையிலிருக்கவேண்டிய 118 பேரில், இந்திய கிறீஸ்துவர்களுக்கு 3 ஸ்தானங்கள்மாத்திரம் கொடுப்பதாய் யோசித்திருப்பதில், 12 ஸ்தானங்கள் கொடுக்கவேண்டுமென வற்புறுத்தப்பட்டிருக்கின்றது.

அதிகாரிகளின் சம்பள விகிதங்கள்.—சீர்திருத்தச் சட்டப்படி அதிகாரிகளின் சம்பளம் பின்வருமாறு:—

இராஜப் பிரதிநிதி	ரூ.	2,56,000.
சென்னை, பம்பாய், வங்காளம், மத்திய மாகாணங்கள் ஆகிய இவைகளின் கவர்னர்களுக்கு	ரூ.	1,28,000.
பிரதம தளக்கர்த்தர்	,,	1,00,000.
இராஜப் பிரதிநிதி நிர்வாக சபை யங்கத்தினர்	,,	80,000.
சென்னை, பம்பாய் முதலிய மாகாணத்து நிர்வாக சபை யங்கத்தினர்	ரூ.	64,000.

கோட்டீஸ்வரன்.—ராக்பெல்லர் என்னும் அமெரிக்கக் கோட்டீஸ்வரர் சமீபத்தில் கிறீஸ்ட்மஸ் நன்கொடையாக 20 லட்சம் பவுன் கொடுத்தனராம். இவ்வள்ளல் இதுவரையில் தருமத்துக்கென்று கொடுத்துவிட்டது 150 கோடி ரூபாயென்று தெரியவருகிறது. அவரிடத்தில் பணம் சுரக்கிறதோ என்கிருர்கள். சாதாரணமாய் இவரது நன்கொடைகளைக் கவனித்தால், அவரிடத்தில் பணம் சுரக்கிறது என்றே சொல்லலாம்போலும்.

பிரான்சில் பாப்பு ஸ்தானுதிபதி.—பிரான்சு தேசத்தின் ராஜாங்கததை யநுசரித்தமட்டில், அதற்கும் அர்ச். பாப்பானவருக்கும் கடந்த சில வருஷங்களாக யாதொரு தொந்தமில்லாதிருந்துவந்தது. இப்போது பிரான்சு அதிகாரிகளுக்கும், அர்ச். பாப்பானவருக்கும் நடந்துவருகிற கடிதப்போக்கு வரத்துகளை நோக்குங்கால், வெகு சீக்கிரத்தில், பாப்பானவரின் ஸ்தானுதிபதியொருவர் பிரான்சு ராஜாங்கத்துக்குநியமிக்கப்படுவாரென்று யூகிக்க இடமிருக்கிறது. இவ்வழியாக பிரான்சு தேசத்துக்கும் பாப்பானவருக்கும் ஒரு சம்பந்தமேற்படுவது நமது சத்திய கததோலிக்குவேதத்துக்கு அநுகூலமன்ருே?

லார்டு செம்ஸ்போர்டு.—இராஜப்பிரதிநிதியாகிய செம்ஸ்போர்டு பிரபுவின் உத்தியோக காலம் அடுத்த ஏப்பரல் மாதத்தோடு முடிவாகிறபடியால், அவர் வழக்கப்படி அப்போது தமது உத்தியோகத்தினின்று நீங்கவேண்டியவராயிருக்கிருர். ஆயினும், நவம்பர் மாதத்தில் மாட்சிமை தங்கிய நமது வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு விஜயஞ் செய்யப்போகிறபடியால், அவர் வந்துபோகிறவரையில் இவர் இராஜப பிரதிநிதியாக இஙகேயே இருப்பாரெனத் தெரியவருகிறது.

பம்பாய் அதிமேற்றிராணியார்.—புதிதாய்ப் பட்டமபெறற பம்பாய் அதிமேற்றிராணியாராகிய மிக. வந். கூடியர் ஆண்டவரவர்கள், "டப்பரின் என்னும் நீராவி மரக்கலத்தின்வழியாய்சென்ற ஜனவரிமீ 27-ம தேதி பம்பாயக்கு வந்துசேர்ந்தார். அவருக்கு அந்த அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த குருக்களாலும் கிறீஸ்துவர்களாலும் மிக்க ஆரவாரத்துடன் நல்வரவு கொடுக்கப்பட்டது. அச்சமயத்தில் பம்பாய் கவர்னர் அவர்களும் கர்னல் கிரீக் என்பவரை தமது பிரதிநிதியாக அனுப்பியிருந்தார்.

சென்னே மியூனிசிபல் எலக்ஷன்.—சென்னபட்டணத்துப் புதிய முனிசிபல் சட்டத்தின்படி சென்ற வாரக் கடைசிமட்டும் கவுன்சிலரின் எலெக்ஷன் வெகு போட்டியுடன் நடைபெற்றது. இதில் இராயபுரம் டிவிஷனுக்கு மூன்றுபேர் அபேட்சகராய் நின்றதில், கத்தோலிக்கு இந்திய கனவானுன ஸ்ரீமான் ஆர். என். தனபால் முதலியார் அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். இவர் காலஞ்சென்ற ஆர். என். பிரகாச முதலியார் அவர்களின் சிரேஷ்ட புதல்வராவர். இவருக்கு நாம் சோபனவாழ்த்துக் கூறுகிருேம்.

மரியாயின் மகா சங்கம்.—ஐந்தாறு வருஷங்களாகத் தடைபட்டுநின்ற இந்த மரியாயின் சங்கமானது அடுத்த டிசம்பர் மீ த்தில் சென்னப்பட்டணத்தில் நடத்தப்படத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்த மகா வைபவச் சடங்குக்கு, கர்திஞல் ஒருவரை உரோமாபுரியினின்று அழைக்கும் விஷயமாக உரோமாபுரிக்குக் கடிதம் எழுதப்பட்டிருக்கின்றது. சென்னே அதிமேற்றிராணியாரும், திருச்சினுப்பள்ளி, மயிலாப்பூர் மேற்றிராணிமார்களும் சேர்ந்து இந்த வைபவம் தக்க சிறப்புடன் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்வார்கள்.

ஜேர்மனியோடு வர்த்தகம்.—லண்டன் நகரத்து வர்த்தகசங்கத்தார்எதிரி தேசங்களோடு வர்த்தக விருத்தியை அதிகப்படுத்தி, மத்திய ஐரோப்பாவிலும் தம் வர்த்தகத்தை ஸ்தாபிக்க ஏற்பாடுசெய்ய வேண்டுமென்கிருர்கள். "டேய்லி கிராணிக்கில்" என்னும் பத்திரிகை, ஜெர்மனியிலிருந்து இறக்குமதியை விருத்தி செய்து, அதன் பணமாற்றத்தைச்சீராக்க வேண்டுமென்றும், அப்படிச்செய்தால் தான் ஜெர்மனியினுல் நஷ்ட ஈட்டுத் தொகை கொடுக்கமுடியுமென்றும், அந்நியரைக் கட்டுப்படுத்தும் சட்டத்தால் ஜெர்மன் பிரஜைகள் உத்தரவின்றி பிரிட்டிஷ் தேசத்துக்குள் வரக்கூடாதாகை

யால், இனி ஜெர்மனி படையெடுப்புப் பயம் கிடையாதென்றும் சொல்லுகிறது.

கவர்ண்மேன்ட் அவுஸ்.—சென்னை மவுண்ட்ரோடு என்னும் மலைச்சாலையிலுள்ள கவர்னர் அவர்கள், தம்மாளிகையை கவர்ண்மென்ட்டு உத்தியோகசாலைகளுக்காக விட்டுவிட்டு, சைதாப்பேட்டைக்கருகிலுள்ள கிண்டி மாளிகைக்கு தமது வாசஸ்தலத்தை மாற்றிக்கொள்ளப்போவதாகத் தெரியவருகிறது. சென்னை ஜார்ஜ் கோட்டைக்குள்ளிருக்கும், கவர்ண்மென்ட் ஆபீசுகளும், சட்ட நிரூபண சபைக் கூட்டங்கள் கூடும் கவுண்சில் மண்டபமும், இன்னுமற்ற ஆபீசுகளும் ஷை கவர்னர் தோட்டத்திலுள்ள கட்டிடங்களிலாவது அல்லது அவற்றிற்காக அங்கே இனி கட்டக்கூடிய கட்டிடங்களிலாவது மாற்றப்படும். இது நல்ல ஏற்பாடாகும்.

இங்கிலாந்தும் ஜேர்மனியும்.—இப்போது ஜெர்மனிக்கும் இங்கிலாந்துக்கும் முடிவாகச் சமாதானம் ஏற்பட்டுவிட்டபடியால், இனி இரண்டு தேசங்களுக்கும் முன்னிருந்ததுபோல் இராஜாங்க வியவகாரங்களில் முறைமைப்பிரகாரம் கடிதப்போக்கு வரவு செய்துகொள்ளுவதற்கு யோக்கியமாய் அந்தந்த முக்கிய நகரங்களில் கான்ஸல்கள், கான்ஸல் ஜெனரல்கள் நியமிப்பது, அவர்களுடைய உரிமைகளை நிதானிப்பது, முடிவாக தூதர்கள் நியமிக்கப்படுவது முதலிய விஷயங்களை இரு இராஜாங்கத்தாரும் கவனித்துவருகிறார்கள். இவ்விருதேசங்களுக்கும் கூடிய சீக்கிரத்தில் இவ்வாறு காரியந் தொடங்கும். லண்டனில் தூதர் ஸ்தானம் நியமிக்க ஜெர்மனியர் சித்தப்படுத்திவருகிறார்கள்.

இந்திய கிறீஸ்துவர்களும், சட்ட சபையும்.—சென்னை இராஜாங்கச் சட்ட நிரூபணச் சபையில், இந்திய கிறீஸ்துவர்களுக்கு (கத்தோலிக்கருக்கும், புரொடஸ்டாண்டருக்குமாக) புதுச் சட்டப்படி மூன்று ஸ்தானங்கள்தான் பிரேரிக்கப்பட்டிருந்தன. இன்னும் மூன்று அதிக ஸ்தானங்கள் கேட்கும்வண்ணம் சமீபத்தில் ஆனரபில் அருமைநாதப் பிள்ளையவர்களும், ஆனரபில் தேவதாஸ் அவர்களும், மாட்சிமைதங்கிய சென்னைக் கவர்னர் அவர்களைக்கண்டு பேசியதில், கவர்னர் அவர்கள் இந்தியக் கிறீஸ்துவர்களுக்கு ஆறு ஸ்தானங்கள் கொடுக்கப்படவேண்டிய விஷயமாக இந்தியா செக்ரெடரிக்குச் சிபாரிசுசெய்வதாக வாக்களித்திருக்கிறார்கள். ஷை இரண்டு ஆனரபில் மெம்பர்களும் இவ்விஷயமாக இந்தியா செக்ரெடரிக்குத் தந்தி யனுப்பியிருக்கிறார்கள். இது அநுகூலமாய் முடியவேண்டுமெனக் கோருகிறோம்.

மிதப்புக்கோவில்.—கடந்த ஐரோப்பா யுத்தத்தின்போது, கடலில் அலுவலாயிருந்த அநேக கிறீஸ்துவர்களுக்கு திவ்ய பூசைசெய்யவும், நற்கருணை, பச்சாத்தாபம்முதலிய தேவத்திரவியாநுமானங்களை நிறைவேற்றவும் யோக்கியமாம்பொருட்டு ஒரு சிறு கப்பல் உதவப்பட்டது. இந்தக் கப்பல் இப்போது பிரான்சு தேசத்தில் சொய்சான்ஸ் என்னும் நதி தீரத்திலுள்ள சில குக்கிராமங்களுக்கு ஒரு கோவிலாக உதவிவருகிறது. இது அந்தந்த கிராமத்துக்குக் குறிக்கப்பட்ட நேரத்துக்குக் கொண்டுபோகப்பட்டு, திவ்யபூசை, பாட்டுப்பூசை, வெஸ்பர்ஸ் என்னும் மாலையாராதனை, திவ்யநற்கருணை யாசீர்வாதம், புதுநன்மை கொடுத்தல் முதலிய தேவத்திரவியாநுமானங்கள் நடத்தப்பட சௌகரியமாயிக்கின்றது. வண்டி முதலிய வாகனங்கள் போகத்தக்க ரஸ்தாக்களெல்லாம் யுத்தத்தால் பாழாக்கப்பட்ட இடங்களில் இந்த மிதப்புக்கோவில் கிறீஸ்துவர்களுக்கு மெத்த நன்மைபுரிந்துவருகிறது. சர்வேசுரனுக்குத் தோத்திரமுண்டாகக்கடவது.

“நிகழ்கால சத்யம்” என்று, பெங்களூரிலுள்ள எஸ். டி. ஏ. பப்ளிஷிங் அவுஸாரால் பிரசுரிக்கப்படும் மாதாந்தப் பத்திரிகையின் நகல் ஒன்று நமது நேயர் ஒருவரால் நமக்கு அனுப்பப்பட்டு, அதில் நமது சத்திய வேதக் கொள்கைகளுக்கு விரோதமாய் பிரசுரித்திருந்த தர்க்கங்களுக்கு மறுப்பு எழுதும்படி கேட்கப்பட்டது. அதை நாம் வாசித்துப்பார்த்ததில், புரொடஸ்டாண்டரால் அடிக்கடி தர்க்கிக்கப்பட்ட விஷயங்களாகிய, “கத்தோலிக்குத் திருச்சபையின் சத்தியம்” “ஓய்வு நாள் அநுசரித்தல்” “திவ்ய

நற்கருணையில் நம்தாண்டவரின் பிரசன்னம்" "திவ்யபலிபூசை" "சுரூப வணக்கம்" "உத்தரிக்கிற ஸ்தலம்" "பாவப்பொறுத்தல்" முதலியவற்றைப் பற்றித் தாறுமாறுயெழுதி, சத்ய கத்தோலிக்கு வேதத்தைத் தூற்றியிருந்தது. இவற்றில் நூதனமொன்றுமில்லை. இத்தகைய தர்க்கங்களுக்கு ஆயிரம் பதினாயிர முறை மறுப்பெழுதி அவர்கள் வாயடக்கப்பட்டிருக்கின்றது. இவற்றைப்பற்றிய தர்க்க நூல்கள் பல. அவற்றுள் வீரமாமுனிவரியற்றிய "வேத விளக்கம்" என்னும் புத்தகத்திலும், "ஞானவுரைகல்" என்ற புத்தகத்திலும் பார்க்க.

பிரங்கிபுரம் லோயர் செக்கன்டரி ஸ்கூல்.—குண்டூர் ஜில்லாவிலுள்ள பிரங்கிபுரம் என்னும் ஊரிலும், அதையடுத்த ஊர்களிலும் தெலுங்கு கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் அதிகம். இந்த ஊரில் கத்தோலிக்குச் சிறுவர்களுக்கு ஒரு லோயர் செக்கன்டரி பள்ளிக்கூடமில்லாக் குறை பெரிதாயிருந்தது. இந்தக் குறையை நீக்க அவ்விசாரணைக் குருக்கள் முயற்சியாலும், கிறீஸ்துவர்களின் உதவியாலும், ஒரு லோ. செ. பள்ளிக்கூடமும், அதை யடுத்தாப்போல் ஒரு போர்டிங் விடுதியும் கட்டப்பட்டு, சென்ற ஜனவரி மாதம் 21-ந் தேதி மிகச்சிறப்புடன் திறந்துவைக்கப்பட்டன. இவை விசேஷமாய் வடக்குத் திசையிலுள்ள தெலுங்குக் கிறீஸ்துவர்களுக்கு மிக்க பிரயோஜனமான ஸ்தாபனங்கள். இவை செழித்தோங்கிக் கருதிய பலன்தர வேணுமாய்க் கோருகிறோம். இதில் சேர விரும்பும் பிள்ளைகள் பள்ளிக்கூடத்துச் சம்பளம், சாப்பாட்டுச்செலவு, வண்ணான், அம்பட்டன் கூலி இவைகளுக்கு மாதம் ரூபாய் 6 விழுக்காடு மூன்று மாதத்திய பணத்தை ஒருமிக்க முன்னதாகக் கொடுக்கவேண்டும். மற்றும் விவரங்கள் வேண்டியவர்கள், குண்டூர், பிரங்கிபுரத்திலிருக்கும், சங். ஜி. பி. ஜே. பிர்மான் சுவாமியாருக்கு எழுதிக்கொள்ளலாம்.

இன்னொரு யுத்தமா?—இப்போது ருஷியாவில் ஒருவாறு ஜெயங்கொண்டு பலமடைந்துவரும் அமிதவாதிகளாகிய போல்ஷிவிக்கர்கள், ஆப்கன் போல்ஷிவிக்கர்களோடு சேர்ந்துகொண்டு, இந்தியாவின்மீது படையெடுக்கலா மாகையால், இந்தியாவுக்கு ஆபத்து உண்டாகலாமென்று லண்டன் பத்திரிகைகள் கூக்குரலிடுகின்றனவென்றும், இந்த நிலைமையை யுத்த மந்திரி ஆபீஸர்கள் ஒத்துக்கொள்ளுகிறார்களென்றும், இப்போது போல்ஷிவிக்கர்கள் இருபது லட்சம் சைன்னியங்களைச் சேர்த்திருக்கிறார்களென்றும், இவர்களை ஜெர்மன் உத்தியோகஸ்தர்கள் பழக்கிவருகிறார்களென்றும், அவர்களிடம் யுத்த தளவாடச் சாமான்களும், பீரங்கிகளும், ஆகாயவிமானங்களும் ஏராளமாயிருக்கின்றனவென்றும், இவ்விஷயத்தைப்பற்றி யோசிக்க, பிரிட்டிஷ் மந்திரிகள் பாரிசுக்குப் போயிருக்கிறார்களென்றும், ஸ்டேட்ஸ்மன் பத்திரிகைக்கு வந்த விசேஷத் தந்தி கூறுகிறது. ஆயினும் பின்னர்வந்த சமாசாரத்தால், பாரிசில் யுத்த மந்திரிகள் ஜார்ஜியா, அஸ்பய்ஜான் ஆகிய தேசத்துப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசியதில், அந்த நாடுகளுக்கு யுத்த தளவாடங்களைக் கொடுத்து உதவுவதால், டிரான்ஸ் காஸ்பியாவில் போல்ஷிவிக்கரை எதிர்த்து நிற்குந் தடையொன்று பலமாக ஸ்தாபிக்கப்படுமென்று தோன்றுகிறது. இப்படிச்செய்தால் போல்ஷிவிக்கர்கள் மத்திய கிழக்குப் பிரதேசத்தில் பிரவேசிக்கவேமுடியாது.

லூர்துநகர் திருயாத்திரை.— கடந்த ஐரோப்பா யுத்தமானது நேசக்கட்சியாருக்கு வெற்றியாய் முடிந்ததற்கு நன்றியறிதலாக நேசக்கட்சியைச்சேர்ந்த சேனாவீரர்களும் அவர்கள் குடும்பத்தாருமாகச் சேர்ந்து ஏறக்குறைய பன்னீராயிரம் ஜனங்கள் சென்ற நவம்பர் மாதம் 11-ந் தேதி அர்ச். லூர்து ஆண்டவள் தரிசனந் தந்த கெபிக்குத் திருயாத்திரையாகச் சென்றார்களாம். அந்தத் திருயாத்திரைக்கு மூன்று கர்தினால்மார்களும், 23 மேற்றிராணிமார்களும், பெல்ஜியம் தேசத்து அரசாதுஸ்தானாதிபதியும், இங்கிலீஷ், அமெரிக்க, இத்தாலிய தளக்கர்த்தர்களின் ஸ்தானாதிபதிகள் முதலாயினோரும் வந்திருந்தனராம். இத்தனையாயிரம் பக்தர்கள் அர்ச். லூர்து ஆண்டவள் பாதாரவிந்தத்தில் சாஷ்டாங்க தண்டனிட்டு நன்றியறிந்து வந்தனஞ்செலுத்தின காட்சியானது, மிகப் பிடிவாதமான நாஸ்திகர்களுடைய மனதைக்கூட இளகச்

செய்யக்கூடியதாயிருந்ததாம். சமீபத்தில் சென்னையில் கத்தோலிக்கர் யுத்தம் முடிவான விஷயமாய் செலுத்திய நன்றியறிந்த தோத்திரக் காட்சியே மிக்க கம்பீரமானதாயிருந்ததென்றால், ஷெ லூர்துநகரில் நடந்த மகத்தான திருயாத்திரையைப் பற்றி யென்னசொல்வதென்று நமக்குத் தோன்றவில்லை. அதைப்பற்றி "லாகுருவா" என்னும் பத்திரிகைக்கு விவரித்தெழுதிய நிருப நேயர், அதை "என்றும் மறக்கமுடியாத காட்சி" என்கிறார். ஐரோப்பா மகா யுத்தம் நம்மவர்க்கு அநுகூலமாய் முடிந்தது முக்கால்வாசி கன்னிமரியாயின் மன்றாட்டுப் பலனினாலன்றோ? இவ்வநுகூலத்துக்காகஉலகமெங்குமுள்ள கிறீஸ்துவர்கள் எத்தனை கோடி விசை "பிரியதத்த மந்திரம்" ஜெபித்திருப்பார்களோ! அதெல்லாம் வீண்போமா?

கத்தோலிக்கரும் புரோடஸ்டாண்டாரும் ஆக இரு தாத்தாரும் ஏகோபித்து, சென்றமீ 27-ம் தேதி, சென்னை, அர்ச். கபிரியேல் பாடசாலையில் ஒரு பெருங் கூட்டங் கூடினார்கள். இம்மாதிரியானக் கூட்டம் இதற்குமுன்னே ஒரே ஒருமுறைதான் கூட்டப்பட்டது. சுமார் 20-வருஷங்களுக்குமுன்னே அதாவது 1901ஞு பெப்ரவரிமீ 23-ம் தேதி, காலஞ்சென்ற மிக. வந். மேயர் ஆண்டவரவர்களின் அக்கிராசனத்தில், இந்தியன் சக்செஷன் ஆக்ட் என்னும் இந்தியன் சொத்து உரிமைச் சட்டத்தின்படி இந்திய கிறீஸ்துவர்களுக்குண்டான கஷ்டங்களைக்குறித்து கவர்ண்மென்டாருக்கு மனுசெய்துகொள்வதற்காகக் கூட்டப்பட்டது. இப்போது புது அரசியல் முறையின்படி இந்திய சட்ட நிருபணச் சபையிலும், சென்னைச் சட்ட நிருபணச் சபையிலும் இந்திய கிறீஸ்துவர்களுக்குக் கவர்ண்மென்டார் கொடுக்க இசைந்திருக்கிற ஸ்தானங்கள் அவர்களுடைய தொகைக்கும், கல்விக்கும் முக்கியத்துக்கும் போதாமையாயிருப்பதால், அதிக ஸ்தானங்கள் கொடுக்கவேண்டுமென்று கவர்ண்மெண்டாருடன் வாதாடவேண்டுமென்பதற்காகவும், இனி இந்தியர்களுக்குக் கொடுக்கப்போகிற வோட்டுரிமைகள் விஷயமாய் ஜனங்களுக்கு அறிவூட்டவும் கூட்டங் கூட்டப்பட்டது. ஆனரபில் மிஸ்டர் தேவதாஸ் அவர்களும், ஆனரபில் மிஸ்டர் அருமைநாதம் பிள்ளையவர்களும், ஸ்ரீமான் எம். ரத்தினசாமி முதலியார் அவர்களும், ஸ்ரீமான் பாலசிங்கம் சத்தியா அவர்களும் முறையே விஷயங்களை நன்கு விளக்கி உபந்நியாசஞ் செய்தார்கள். இவ் விஷயத்தைப்பற்றி முடிவான தீர்மானங்கள் செய்து, அவைகளை கவர்ண்மென்டாருக்கு அனுப்பும் வண்ணம் இரண்டொரு வாரத்துக்குள் இன்னொரு இந்திய கிறீஸ்துவர்கள் (கத்தோலிக்கரும், புரொடெஸ்டாண்டரும் சேர்ந்த) கூட்டங் கூட்டப்படும்.

திருச்சபையின் அபிவிருத்தி.—இங்கிலாந்தில் பிரதி மாதத்திலும் சாராசரி 600 பேர் கத்தோலிக்கு வேதத்தைத் தழுவி வருகிறார்கள். சர்வேசுரனுக்குத் தோத்திரமுண்டாவதாக.

ஆரம்பாக்கம்.—லூர்துநாயகி தரிசனையின் வருஷாந்திர திருவிழா சென்னை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த ஷெயூர் கோவிலில் வழக்கப்படி ஆரவாரமாய் கொண்டாடப்படும். கொடியேற்றம், நவநாட் செபம் 1920ஞு பிப்ரவரிமீ 7உ. 1920ஞு பிப்ரவரிமீ 14உ சனிக்கிழமை மாலையில் வெஸ்பர்ஸ், திவ்யநற்கருணை ஆசீர்வாதம், தேர்சுற்றுப்பிரகாரம், வெளி மைதானப் பிரசங்கம். 1920ஞு பிப்ரவரிமீ 15உ ஞாயிற்றுக்கிழமை காலையில் பெரிய பாடல்பூசை, பிரசங்கம், திவ்யநற்கருணை ஆசீர்வாதம். கத்தோலிக்கு கிறீஸ்துவர்களும் மற்றவர்களும் இந்தப்பொருத்தனைக்கோவிலில் நமது பரம தேவதாயாரைக் கொண்டாட இத்திருநாளுக்கு வரக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மோக்ஷ இராக்கினி முடிபெற்ற பரம ஆண்டவள் திருயாத்திரைக்காரருக்கும் இத்திருநாளை நடத்த உதவிசெய்யும் தர்மிஷ்டருக்கும் ஏராளமான சப்பாவனை அளிப்பாள். ஆரம்பாக்கம் நார்த்-ஈஸ்ட் ரெயில்வே லைனில் இருக்கும் ஓர் ரெயில் ஸ்டேஷன். இதற்கும் சென்னைக்கும் 38-மைல். ரெயில் சார்ஜ் 0—8—3. கோவிலுக்கும் ரெயில்வே ஸ்டேஷனுக்கும் மெத்த சமீபம். கோவில் தோட்டத்தில் ஓர் சத்திரமும் உண்டு.

P. O. ஆரம்பாக்கம் R. Stn.
(நெல்லூர் ஜில்லா)
1920ஞு ஜனவரிமீ 1உ } S. M. F. Ignatius,
குருவானவர்.

மா-ா-ஸ்ரீ பேதுரு சவியேர் பருனுந்தவர்கள் மரணத்தின் முதலாவது வருட பூர்த்தி

ஞாபகச் சின்னம்.

இக்கனவான்,

“ நிலவு வெண்முத்தும் பொன்னு நீணிற மணியுஞ்சாந்தும்
தலைமயக்குற்ற வாற்றூற்றண் மதிதவழுங் கோட்டு
மலைவனம் பெரிதென் கோயான் வால்வளை பரந்து மேயும்
அலைவனம் பெரிதென் கோயான் யாதென வரைவன் மாதோ. ” என்று

பிறரால் வியந்துகூறியதை ஒத்த பரத கண்டத்தை. நிலவை உமிழ்கின்ற வெண்குடையையுற்று ஏக சக்கரத்தினால் மேகத்திலும் பதின்மடங்குதவி தனிக்கோலோச்சிய பரத மகாராஜனின் வமிஷராகி,

எம்பிரான் புகழை ஓயாது வாழ்த்திக்கொண்டும். மனிதர் அகங்கலங்கப் பெரும் போர் செய்து அழிவைச் செய்கின்ற பேய்க்கணங்களெல்லாம் மலைகளும் அதிரும்படி அம்மலையின்மீது இடிவிழுந்தவாறுபோல், தீ நிரம்பிய நரகமும் அதிரும்படி அந்நகரத்தில் விழவும். அத்தீப்பேயின் வழிப்பட்டோர்களையும் வானும் பூவும் வணங்கா நிற்கும் உயர்ந்த மலையிநுச்சியில் அரிய நவங்களால் நிகரற்றிலங்கும் திருக்கோவிலின் தமனிய பீடத்தின் சிலுவை பத்திராசனத்தில் பாவிகளை அரவணைக்க திருக்கரங்களை விரித்தபாவனையாய் வீற்றிருக்கும் தயாநிதியாகிய எம் நாதனின் அலர்தாளின் நிழலில் வந்தடையவுஞ் செய்கின்ற உக்ரக ஓசையால் ஒலிக்கின்ற கடலால் சூழப்பட்ட மணப்பாடு எனும் திருக்ஷேத்திரத்தை ஜனன நகராகப்பெற்று. “ திரைகடலோடியுந் திரவியந்தேடு ” என்ற மூதாட்டியின் வாக்கை ஆதாரமாகக்கொண்டு, பலவளங்களாலும் நிறையப்பட்டு பன்னிற மணிகளை வாரிக்கொண்டும் கீர்த்திமிகுந்த ஆங்கில மன்னனை பண்ணிசைகளோடு பாடிக்கொண்டும். அகண்ட பெரிய சமுத்திரத்தில் சேர்க்கின்ற அருவியையுடைய இலங்கைத்தீவின்கண் துலங்கிய முத்துக்களை எயிறாகக்கொண்டிலங்கிய சிலாபம் என்ற நகரை வர்த்தக ஸ்தலமாகத்தெரிந்து, சூக்கும அறிவும். முன் ஜாக்ரதையும், முறையிற் பொலிந்த நீதியுமுற்று பல்லோர்களாலும் நன்கு மதிக்கப்பட்டு, நற்குணசீலனாய் ஊழியர்களை தன்னரும் புதல்வர்போல் நல்வழிப்படுத்திய உத்தமன்.

வானோர்களாலும் நடுநடுங்கி வணங்குதற்குரிய தேவ வரங்களால் உயர்த்தப்பட்டு, முப்பொழுதுங் கன்னிகையின் பரிசுத்த தேவ தாயின்மேலுள்ள பக்தியால் ஏவப்பட்டு, அந்நாயகியின் சபைகளுள் ஒன்றாகிய கார்மேல் சபையில் சேர்ந்து, தன்னால் கூடியவரை பரம நாயகியின் திருவிழாக்களைச் சிறப்பாய்க் கொண்டாடி, இன்னும் அத்தாயின்பேரால் அரிய நற்கிரியைகளை தன் ஜீவிய கால முழுவதும் செய்துவந்த பக்தர் சிரோமணி.

அச்சந்திரகுல திலகன் மரணித்த அன்று சாயங்காலம் 4½ மணியளவில் சந்திரனைத் தாரககணங்கள் சூழ்ந்ததேபோல் அவர் சடலத்தை அக் குல கனவான்கள் சூழ்ந்து போரளை வாடிக்குக் கொண்டு சென்று, அது சங். வேதியரால் மந்திரிக்கப்பட்டு பாண்டிய ராஜனின் வம்ஷவாரிகளான சுத்தவீரமுள்ள காளைகளால் வச்சிரமலையு முருகும்படி சுவாமியின் இரக்கத்தைக் கேட்டு பாடியபின், பூமிதானம் பண்ணப்படவே, அந்த அழகிய காடெல்லாம் அழுததன்மையாய்த் தோன்றின. யௌவனயுவதியாகிய இலங்கை மங்கையோ திவ்ய க்ஷேத்திரத்திலுதித்த மகானை எப்படிக்கைக்கொள்வதென்ற நாணத்தோடு அவளதரத்தில் செல்வமெனுந்தேறல் வழிந்தோட, இளங்கையோடு பிரிந்த உயிர் மீண்டும் வந்தடையும்வரை பாதுகாக்கவேண்டி நவரத்தனங்களால் இழைத்த பூந்துகிலால் போர்த்திக்கொண்டதேபோல் வண்டுகள் ஆர்த்து அருந்தத்தக்க நறிய தேனைப்பொழியும் பன்னிற மலர்களை இம்மகானில் அன்பு பூண்ட கனவான்கள் கல்லறைமேல் பரப்பினார்கள். இவ்வாச்சரிய காட்சியைக்கண்டிருந்த எல்லவனோ மறலியை எறிக்க உண்ணியும் மனுமகன் வந்த சத்தியத்தையறிந்தவன்போல், வெருவும் அச்சமும் நாணமும் அனுதாபமும் உறீஇ மின்னல்போல் மின்னி, புகைபோல் மாறி மறையும் இப்பாழும் உலகின் அநித்திய வாழ்வுகளை வெறுத்த துறவோர் எனத் தானுந் தன் கிரணங்களாகிய புலன்களை ஒடுக்கிக்கொண்டு மேற்றிசை கடலுளாழ்ந்தான்.

சுவாமீ ! அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்தருளும்; முடிவில்லாத ஒளி அவர்களுக்குப் பிரகாசிக்கக்கடவது.

ஜனனம் :—7—4—1855. மரணம் :—1—2—1919. R. I. P.

இங்ஙனம், இந்நல்ல எஜமானை இழந்து பரிதவிக்கும், ஊழியர்களில் ஒருவன்.